Registered as a Newspaper in Ceylon

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

போன் 389 National Tamil Daily தேசிய தினசரி தபாற் பெட்டி எண் 49

மலர் 5 யாழ்ப்பாணம் சோபகிருது சித்திரை 14 ஆம நாள் துல்ஹஜ் 2 (27-4-63) சனிக்கிழமை இதழ் 77

ஆண்களுக்கு
வீரியத்தைப் பலப்படுத்த
புதிய ஜெர்மன் மருந்து
REDEX CREAM
எல்லா வியாபாரிகளிடத்திலும்
கிடைக்கும்.
விலை ரூபா 5-00 வி. பி. பி. சதம் 50
மெட்ரோ ஏஜென்ஸி
325 1/1, நொரிஸ் ரோட், கொழும்பு-11.

# யாழ்ப்பாணத்தில்

## புதிய மோசடி!

## வேலை தருவதாக கூறி பணம் பறிக்கப்படுகிறதாம்

### பொலிசார் தீவிர கண்காணிப்பு

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணத்தில், இப்பொழுது புதுவித மோசடி ஒன்று தோன்றியுள்ளதாகவும் போலிச் சங்கங்கள் பல இளைஞர்களுக்கு வேலை தேடித்தருவதாகவும் வேலைக்கு சேர்த்துக்கொள்வதாகவும் ஆயிரக்கணக்கில் பணம் வாங்கி விட்டுப் பின்னர் ஏமாற்றி விடுவதாகவும் அறியப்படுகிறது.

சில கோஷ்டியினர் சில வேளைகளில் வெவ்வேறு விதத்தில் கம்பெனிகளெனக் குறிப்பிடும் பெயர்ப்பலகைகளைத் தொங்கவிட்டு விளம்பரங்களைச் செய்து அந்தக் கம்பனிகளைத் தேடி வருபவர்களிடம் பொய்யான வாக்குறுதிகளை அளித்து பணத்தைப் பெற்று பின்ன அவர்களை ஏமாற்றி வருகின்றனராம்.

விவாககாலத்தில் ரொக்கமாகப் பணம் பெறுவதற்கான வசதிகளைச் செய்து கொடுப்பதாக மாதாமாதம் பணம் வாங்கிவிட்டுப் பின்னர் பணத்தைக் கேட்பவருக்கு அவர் கொடுத்த பணத்தைக் கூடத் திருப்பிக் கொடுக்காது ஏமாற்றி விடும் சங்கங்களும் இங்கு மலிந்துள்ளதாக அறியப்படுகிறது.

இவ்விதமாகப் பல மக்கள் ஏமாற்றப்பட்டுள்ளதாக பொலிஸாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒரு கம்பனி வேலை தேடித் தருவதாக பலரிடம் பணம் பெற்று ஏமாற்றி வந்துள்ளதாக பொலிஸாரிடம் புகார் செய்யப்பட்டுள்ளது.

ஆஸ்பத்திரி வீதியைச் சேர்ந்த ஒருவர் பலம் மின்சார நிலைய வீதியிலுள்ள ஒரு இன்சூரன்ஸ் கம்பனியில் ரூ 3000 வரை மகளின் கல்யாணச் செலவுக்கென பணம் போட்டு வைத்திருந்தாராம். ஆனல் மகளின் திருமணத்தின் போது ரூ 200 மட்டுமே பெறமுடிந்ததாம்.

இவ்வித மோசடிகள் பற்றி பொலிஸார் தீவிர நடவடிக்கை எடுக்க தீர்மானித்துள்ளதாக பொலிஸ அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

—

## மாநரசபை கூட்டம்

யாழ்ப்பாணம், சனி

மேயர் பற்றியும், மாநகர சபைக் கூட்டம் பற்றியும் நேற்று 8 மாநகரசபை அங்கத்தினர்கள் கூடி ஆலோசனை செய்தனர். இன்று இது பற்றி ஒரு விரிவான அறிக்கை வெளியிடப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

## திருமலையில் உதவி மந்திரி தபால் நிலையத்துக்கு சென்றார்

திருக்கோணமலை, வெள்ளி

திருக்கோணமலைக்கு வந்திருந்த உதவிப் போக்குவரத்து மராமத்து அமைச்சர் திரு. டி. பி. தென்னக்கூன் திருமலை பிரதம தபால்நிலையத்திற்கு விஸ்யம் செய்து தபால் அதிகாரிகளுடன் சம்பாஷணை நடத்தினார். அன்றையதினம் தபால் கந்தோரின்முன் நடைபெற்ற எல்லாம் தமிழியக்கத்தில் கலந்துகொண்ட தோண்டர்கள் உதவி அமைச்சரின் வருகையை அவதானிக்காதவண்ணமாக இருந்தனர்.

## 'அரசாங்கம் எவருக்கும் பாரபட்சம் காட்டவில்லை'

### திரு. வி. ஏ. கந்தையாவுக்கு உதவி மந்திரி பதில்

கொழும்பு, வெள்ளி

"நாட்டின் 30 சத விகிதமானோர், தமிழர்களாயிருந்தும் தமிழ் மொழிக்கு உத்தியோக அந்தஸ்து மறுக்கப்பட்டுள்ளது. பார்லிமெண்ட் அலுவல்கள் சம்பந்தமான தஸ்தாவேஜுகள் விஷயமாகவும், சிங்களம் தெரியாதவர்களுக்கு கஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. சிங்களம் தெரியாத ஒரு எம். பி. க்கு பார்லிமெண்டில் என்ன நடைபெறுகிறது என்பதே தெரியாது. இலங்கை சிறுபான்மை சமூகத்தினர் இவ்விதம் தான் நடத்தப்படுகின்றனர்" என திரு. வி. ஏ. கந்தையா இன்றைய பார்லிமெண்டில் பேசும்போது கூறினார்.

இதற்குப் பதிலளித்துப் பேசிய காணி விவசாய உதவி மந்திரி திரு. முதியான்ஸே தென்னக்கூன் கூறியதாவது:-

எவருக்கும் அநீதியாக நடந்து கொள்ள அரசாங்கம் முயற்சிக்கவில்லை. தமிழ் மக்களுக்கும் தமிழ் அரசாங்க ஊழியர்களுக்கும் தமிழரசுக் கட்சியே தவறான வழி காட்டுகிறது. தமிழர்கள் சிங்களத்தை படிக்க அவர்கள் அனுமதிக்காமலிருக்கிறார்கள்.

றப்பர் கட்டுப்பாட்டு மசோதா இன்று பாராளுமன்றத்தில் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட பொழுதே திரு. வி. ஏ. கந்தையா முன் கூறியவாறு குறிப்பிட்டார். சிங்களத்தில் தேர்ச்சி பெறாத குமாஸ்தாக்களும் உத்தியோகஸ்தர்களும் இளைப்பாறுவதற்கு வகை செய்யும் மசோதா கொண்டுவரப்பட்டுள்ளதாக திரு. எம். தென்னக்கூன் மேலும் தெரிவித்தார்.

றப்பர் கட்டுப்பாட்டு மசோதா நிறைவேற்றப்பட்டது.

### சபையில் கேள்விகள்

பாராளுமன்றம் ஒத்திவைக்கப்படும்சமயம் ஊர்காவற்றுறை எம். பி. திரு. வி. ஏ. கந்தையா, நெடுந்தீவிலுள்ள ஆஸ்பத்திரி கடந்தசிலமாதமாக வைத்தியர் இல்லாமல் இயங்கிவருவதாகவும், கடமையாற்றிவந்த அப்போதிக்கரியும் ஆஸ்பத்திரியை விட்டுச் சென்று விட்டதாகவும், திரும்பி வரவில்லையென்றும் சுகாதார மந்திரியின் கவனத்துக்குக் கொண்டு வந்தார். இங்கிலையில் ஆஸ்பத்திரி அந்த ஊர்மக்களுக்கு உரிய முறையில் சேவைசெய்யவில்லையென்றும் இதைத் தடுப்பதற்கு மந்திரி உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

சில பத்திரிகைச் செய்திகளின் படி பெற்றோலிய கூட்டு

(8-ம் பக்கம் பார்க்க)

## "பிரதமர் பதவியை துறக்க நேரிடும்"

### ரஷ்யப் பிரதமர் குருஷ்சேவ் அறிவிப்பு

மாஸ்கோ, ஏப்ரல் 26

ரஷ்யப்பிரதமர் பதவியையும் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் பதவியையும் தாம் துறக்கவேண்டி நேரிடும் என்று ரஷ்யப் பிரதமர் திரு. குருஷ்சேவ் தெரிவித்துள்ளார்.

கிரம்ளினில் கடந்த புதன்கிழமை தொழிலாளர்கள் மத்தியில் திரு. குருஷ்சேவ் பேசுகையில், பிரதமர் பதவியையும் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் பதவியையும் தாம்துறக்கவேண்டிவரும் என்றும் பிரதமர் பதவியை எல்லோராலும் வகிக்கமுடியதென்றும் கூறினார். 69 வயதான ஒருவர் இந்தப பதவிகளை வகிப்பது சுலபமல்லவென்றும் அவர் சொன்னார்.

திரு. குருஷ்சேவ், சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவராக பத்துவருடமும், ரஷ்யப் பிரதமராக ஐந்து வருடமும் சேவை புரிந்துவருகிறார்.

## ரஷ்யாவில் குறள் மொழிபெயர்ப்பு

புதுடில்லி, ஏப்ரல் 26

500 பாரத ஆசிரியர்கள் எழுதிய 170 லட்சம் நூல்கள் ரஷ்யாவில் விற்பனை செய்யப்பட்டிருப்பதாக, இந்தியாவிலுள்ள ரஷ்யத்தூதர் அறிவித்தார்.

மகாத்மாகாந்தி, ரவீந்திரநாத்தாகூர், ஜவஹர்லால் நேரு ஆகியோர் உட்பட, புகழ் பெற்ற இந்திய ஆசிரியர்கள் எழுதிய நூல்களை ரஷ்ய மக்கள் விரும்பிப் படிக்கிறார்களென பேராசிரியர் பெட்ரோவ்ஸ்கி கூறினார்.

திருவள்ளுவரின் திருக்குறள் ரஷ்ய மொழியில் பெயர்க்கப்படுவதாயும் அறிவிக்கப்பட்டது.

பாரதநாடு சுதந்திரமடைந்து சொற்பகாலமே ஆகியிருந்தபோதிலும் நாட்டில் பெரும் பொருளாதார முன்னேற்றம் ஏற்பட்டிருப்பதாகவும், பாரத பொருளாதார நிபுணர்களின் உயர்ந்த திறமை ரஷ்யாவை வெகுவாகக் கவர்ந்துள்ளதாயும்மேலும் அறிவிக்கப்பட்டது.

## முதல் முஸ்லிம் மாணவர்

### சமஸ்கிருத பரீட்சையில் சித்தி

யாழ்ப்பாணம், வெள்ளி

சென்ற வருடம் செப்டம்பர் மாதம் பாரதிய வித்யாபவன் நடத்திய சரணசமஸ்கிருத பரீட்சையில் யாழ்ப்பாண முஸ்லிம்களில் முதன்முறையாக ஒருவர் சித்தியடைந்துள்ளார். யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மாணவனான கே. எம். தஹா என்னும் இவர் முதற்பிரிவில் சித்தியடைந்துள்ளார். என்பது குறிப்பிடத்தக்கது. இவர் யாழ்ப்பாணம் ராப்ஸ் வீதியில் வசிக்கிறார்.

—

## மீண்டும் வேலை கிடைத்தது

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணம் மாநகரசபை முன்னாள் மேயரினால் வேலையிலிருந்து தடுத்துவைக்கப்பட்டிருந்த நகரசுத்தி தொழிலாளர்களாகிய ஐயன் முருகன், கபிரியல்சிங்கம் ஆகியோருக்கு மீண்டும் வேலை கொடுக்கப்பட்டுள்ளது.

## 'வகுப்புவாதத்தை வளர்ப்பது தமிழரசுக் கட்சியே'

### உதவி மந்திரி சீற்றம்

திருகோணமலை, வியாழன்

"இந்நாட்டில் வகுப்புவாதம் தோன்றுவதற்கும் வகுப்புவாதம் நிலைபெற்றிருப்பதற்கும் தமிழரசுக்கட்சியினர் தான் காரணமென்று" ஸ்ரீலங்காசுதந்திரக் கட்சி அரசாங்கத்தின் போக்குவரத்து மராமத்து மந்திரி திரு டி. பி. தென்னக்கூன் திருகோணமலையில் அபயபுரப் பகுதியில் உள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் திருக்கோணமலைக் கிளையின் புதிய காரியாலயத்தைத் திறந்துவைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார். திரு. தென்னக்கூன் மேலும் கூறியதாவது:- "தமிழரசுக் கட்சியினர் தான் இந்த நாட்டிலே வகுப்புவாதம் தோன்றுவதற்கு ஆதரவாயிருப்பவர்கள். தமிழ் மொழியின் உரிமைகளை ஸ்ரீலங்கா சுதந்திரகட்சி அரசாங்கம் பறிக்கின்றது என்று பொய்யான கருத்துக்களை நாட்டு மக்களிடையே பரப்பி தமிழ்பேசும் மக்களை தமிழரசுக்கட்சி ஏமாற்றிவருகிறது. இந்நாட்டில் தமிழர் சிங்களவர் என்ற பிரிவினையை வளர்த்து அதன் மூலம் தங்களின் அரசியல் வாழ்வின் ஆயுளை நீடிக்கமுயலும் இலங்கைத் தமிழரசுககட்சியின் கனவு ஒருக்காலும் பலிக்க மாட்டாதென்பதை நான் திடமாக அறிவேன். வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தமிழரசுக்கட்சியினரே பிரதிநிதிகளாகயிருப்பினும் இலங்கை வளநாட்டின் இரு கண்களான தமிழர் - சிங்களவர் பரஸ்பர ஒற்றுமையுடனும், ஒத்துழைப்பு மனபபான்மையுடனும் இந் நாட்டில் வாழவேண்டுமென்ற ஒரே எண்ணம் உடையவர்களாக அனேகர் இருக்கின்றனர்.

அவர்கள் இப்போது தமிழர் - சிங்களவர் ஒற்றுமைக்காகப் பாடுபடுகிறார்களெனில் மிகையாகாது. யாழ்ப்பாணப் பிரதிநிதி திரு. அல்பிரட்

(8-ம் பக்கம் பார்க்க)

## SCHOOL OF TECHNOLOGY, JAFFNA

### 1963 64 COURSES

*For Candidates with* **J. S. C.** *standard*

Electrical Installation work | Theory and Practical
Radio Servicing
Motor mechanism | One Year Courses

*For Candidates with* **G. C. E. Certificate** *with passes in* **Pure Maths., Physics** *and* **English**

Electrical Engineering Practice (Preliminary)
Electrical Engineering Practice (Intermediate) | City and Guilds
Electrical Installation Work (Course A.) | London

*Part I.* **Institute of Engineers London.**

A.M.I.E.E.; A.M.I.MECH.E.; A.M.I.E.E.

*For Candidates with* **G. C. E. Certificate** *with* **Pure Maths., English** *and preferably with* **Drawing.**

Authorised Draughtsmen—Surveyor General's Exam. in May 1964

Civil Engineering Drawing | School Certificate
Building Construction

*For Candidates with* **G. C. E. Certificate** *with passes in* **Englisn, Pure Maths., Sinhala/Tamil,** *and three other subjects not more than* **Two sittings.**

Surveying — S G's Licence Exam. August 1965.

**Applications close on May 15. Courses commence on June 3, 1963. Forms and other particulars can be had from :**

**" CITADEL " Chundukuli, JAFFNA.** **Director.**

25-4-63.



ஐஸ் பழம் ! ஐஸ் கிறீம் !!

★ சந்திரா ஐஸ் பழம் !
★ சந்திரா ஐஸ் கிறீம் !!

ஐஸ்கிறீம் தயாரிப்பதில் முதன்மை

வகிப்பவர்கள்

**சந்திரா ஐஸ் கிறீம் கம்பெனியாரே**

உரிமையாளர்: நா. சுந்தரராஜ்

நிர். 108, சிவன் கோவில் வடக்கு வீதி, யாழ்ப்பாணம்.



அரசாங்க

**கேள்விப்பத்திரங்கள்**

**நீர்ப்பாசனத் திணைக்களம்**

என் 944-செங்கலடி உப-பிரிவில் உன்னிச்சை ஸ்பில் வாய்க்கால் பாலத்தோடு சேர்ந்த ரெகுலேட்டர் முதலியவை அமைத்தல். கேள்விப்பத்திரங்கள் 21-5-63 வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

**இலங்கை அரச விமானப்படை**

என் 968-இலங்கை அரச விமானப் படையின் சீனன்வாடித் தளத்திலுள்ள பழைய பிரதான நீர் விநியோகக் குழாய்களை நீக்கி புதிது இணைத்தல். கேளவிப் பத்திரங்கள் 17-5-63வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

இதன் முழுவிபரங்களுக்கும் 26-4-63-ல் வெளியான அரசாங்க வர்த்தமானியின் 1-ம் பகுதி, 2-ம் தொகுதியைப் பார்க்கவும். இதன் பிரதிகளை சகலகச்சேரிகளிலும், பெரும்பாக இறைவரி உத்தியோகத்தர்கள் கந்தோர்களிலும், தபாற்கந்தோர்களிலும், உப-தபாற்கந்தோர்களிலும், புகையிரத நிலையங்களிலும் பார்வையிடலாம்.



**திருநெல்வேலி ஆடியபாதம் வீதியில் அமைந்திருக்கும்**

ஸ்ரீ கணேஷ் களியாட்டுவிழா அரங்கில் இன்று மாலை

**அகில இலங்கை புகழ்**

நடிகர்

**வி. வி. வைரமுத்து**

கோஷ்டியினரின்

**அரிச்சந்திரா மயானகாண்டம்**

என்னும் சிறந்த நாடகம் நடைபெறும்.

மற்றும் அதிபயங்கரமான சகலஸ சர்க்கஸ் விளையாட்டுகளையும்

காணத்தவறாதீர்கள்!



**வரி விளம்பரம்**

**விற்பனைக்கு**

புதிய 10 H. P. மோட்டார் ஒன்றும், எலக்றிக் வெல்டிங் ஒன்றும் விற்பனைக்கு உண்டு. எவர் சில்வர் மாளிகை, 241, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். 922

**புதுமனைப் பிரவேசம்**

எதிர் வரும் 29-4-63 திங்கட்கிழமை இரவு 9 மணிக்கு மேல் வரும் சுபமுகூர்த்தத்தில் யான் புதிதாக அமைந்த "பரணி பவனம்" என்னும் மனையில் பிரவேசம் செய்ய இருப்பதால் தாங்கள் யாவரும் வந்துசந்தோஷம்கொண்டாடிப் போகுமாறு கேட்டுக்கொள்ளுகிறேன். இங்ஙனம், இ. க. கணேசன், காளிகோவிலடி, சுழிபுரம். 939

**நோய்வு: நீரிழிவு**

குணப்படுத்த உத்தரவாதம் மந்திரிமார், அரசியற் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்ற விபரங்கள் அடங்கிய சுற்று லோக் இலவம். தொய்வுக்கு 10 நாள் மருந்து 12/50 நீரிழிவுக்கு 10 நாள் மருந்து 10/50. வைத்தியர் பரிபூரணனந்தா கைலாயபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.


ஆசிரியருக்குக் கடிதம்

# தமிழ்அரசுக்கட்சியா காரணம்?

'ஈழநாடு' 19-4-63 இதழில் வந்த செய்தியின்படி மூதூர் இரண்டாவது பிரதிநிதி திரு. மஜீத் அமிழ்அரசுக் கட்சியில் சில குற்றங்கள் சுமத்தியிருக்கிறார்.

முதலாவது குற்றச்சாட்டு, ஈழத்தமிழ் பேசும் மக்களின் பாரம்பரிய பிரதேசங்களான அல்லை, கந்தளாய், அம்பாறை போன்ற இடங்கள் தமிழ்அரசுக்கட்சியால்தான் பறிபோயின என்பதாகும். திரு. மஜீத் இந்நாட்டு அரசியல்வரலாற்றை மறந்துவிட்டார் போலத் தெரிகிறது. தமிழ்அரசுக்கட்சி பிறப்பதற்கு முன் பெரிய சேனநாயக்காவால் திட்டமிடப்பட்டு ஆரம்பித்து வைக்கப்பட்ட சிங்களக் குடியேற்றம், அவர் காலத்திலும் திருவாளர்கள் டட்லி சேனநாயக்கா, பண்டாரநாயக்கா காலங்கள்லும் உச்சக்கட்டத்தை அடைந்தது. அதன் விளைவாக திரு. மஜீத் குறிப்பிடும் இடங்கள் மாத்திரமின்றி வடமாவட்டத்தில் ஒரு பகுதியும் புத்தளம் மாவட்டம் பெரும்பகுதியும் போய்விட்டன. இக் குடியேற்றங்களை அன்றுமுதல் இன்றுவரை எதிர்த்த ஒரேஒரு கட்சி தமிழ் அரசுக்கட்சி மட்டுமே. மற்றையோர் எல்லோரும் இதற்கு உடந்தையாயிருந்தனர், அல்லது மௌனம் சாதித்தனர் திட்டமிட்டு அரசாங்கத்தினுல் நடத்தப்பட்ட சிங்களக் குடியேற்றத்துக்குத் தமிழ்அரசுக் கட்சி காட்டிய பலத்த எதிர்ப்பினுலும், தமிழ், முஸ்லிம்மக்களைப் பெருவாரியாகக் குடியேற்றுவதில் அயராது திரு. வன்னியசிங்கம் தலைமையில் உழைத்ததாலும் தான் இன்றுள்ள அளவிற்கேனும் எமது பகுதிகள் காப்பாற்றப்பட்டன! பண்டாரநாயக்கா–செல்வநாயகம் ஒப்பந்தத்திலும் அதன் பின் 1960-ல் யு. என். பி.யுடனும் சிறிமாவோவுடனும் நடத்திய பேச்சுக்களிலும் குடியேற்றப்பிரச்னை முக்கிய இடம் பெற்றதையும் நாம் அறிவோம். சென்ற மூன்ருண்டுகளாக ஆளும் கட்சியிலிருந்து ஒத்துழைப்பு நல்கிவரும் திரு. மஜீத் பறிபோகவிருக்கும் திகவாபியைக் காப்பாற்ற என்ன செய்யப்போகிருர்?

தமிழ்அரசுக்கட்சி எதிர்த்ததால்தான் குறித்த பகுதிகள் பறிபோயின என ஒருவேளை திரு. மஜீத் வாதாடக்கூடும். எமது பகுதிகளிலேயே நம்மைச் சிறுபான்மையோராக்கும் அரசியல் காரணத்துடனும் எமது நிலங்களை சிங்கள மக்கட்கு வழங்கும் பொருளாதார நோக்குடனும் கொண்டுவரப்பட்ட ஒரு திட்டம் தமிழ் அரசுக்கட்சியின் எதிர்ப்பில்லாதிருந்தால் கைவிடப்பட்டிருக்கும் என நம்பமுடியும்.

அடுத்து சிங்கள மக்களுடன் ஒத்துழைத்திருந்தால் இன்றைய நிலை ஏற்பட்டிருக்காது என்பது குற்றச்சாட்டு. 1947-க்குப்பின் திருவாளர்கள் சுந்தரலிங்கம், சிற்றம்பலம் தொடக்கம் திருவாளர்கள் பொன்னம்பலம், சு. நடேசன், மஜீத் ஈருக ஒத்துழைத்திருக்கின்றனர். திரு. பொன்னம்பலத்தின் ஒத்துழைப்புக்காலத்தில் தமிழ்ப்பேசும் மக்களின் பிரதிநிதிகள் பெரும்பகுதியினர் அரசாங்கத்துடன் ஒத்துழைத்தனர்! இவ்வொத்துழைப்புகளுக்குப் பின்னும் அந்த நிலை ஏற்பட்டிருக்கின்றது. இன்றைய நிலைக்கு ஒத்துழைப்பின்மையல்ல காரணம். சிங்களமக்கள் மத்தியில் இயங்கிவரும் கட்சிகளின் தயவில் வாழாமல் நம்மை நாமே ஆளும் உரிமையில்லாததே காரணம்.

மூன்ருவது குற்றச்சாட்டு, அரசியலுக்கப்பால் வைத்து ஆராயப்பட வேண்டியமொழிப் பிரச்னை தீர்க்கப்படாமல் இருப்பதற்கு தமிழ் அரசுக்கட்சியே காரணம் என்பதாகும். மொழிப்பிரச்னை தமிழ்பேசும் பிரதிய இனத்தைக் கொடுமையாகத் தாக்கும் பிரச்னை. சிலர் துரோகமிழைத்தபோது இனத்தைக் காக்கும் பொறுப்பு தமிழ் அரசுக்கட்சியிடம் ஒப்படைக்கப்பட்டது. தேர்தலில் வெற்றியீட்டுவதற்கு இப்பிரச்னையை அரசியலில் இழுத்துவிட்ட "பெருமையில்" திரு. மஜீத் சார்ந்துள்ள கட்சியினருக்கு பெரும்பங்குண்டு. தமிழ்அரசுக்கட்சி அரசியல் கண்கொண்டு இப்பிரச்னையை அணுகியிருந்தால் ஓரளவுக்கு விட்டுக் கொடுத்து சமரசம் காண விழைந்திருக்காது.

தமிழ்ப்பேசும் மக்களுக்கும் சிங்கள மக்களுக்கும் இடையிலுண்டான வெளியை நிரப்பி இந்நாட்டில் ஒற்றுமையும் அன்பும் அமைதியும் சுபிட்சமும் நிலவ பாடுபடும் பெரியார்கட்கு எங்கள் நன்றியும் ஆதரவும் உண்டு. ஆனல் அந்த இடைவெளியை தங்கள் சுயநலத்தால் நிரப்ப முனைபவர்களைப் பெரியார் என எப்படி அழைக்க முடியும்?

ம. முத்துச்சரம்

## கள்ளக்கடத்தல் செய்தவருக்கு சிறைத்தண்டனை

கொழும்பு, வெள்ளி

கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு கட்டுநாயக்கா விமான நிலையத்தில் இந்திய வர்த்தகர் கோவிந்தராஜு என்பவரிடமிருந்து 500 கைக்கடிகாரங்களை சுங்கப்பகுதியினர் கைப்பற்றினர். சட்டவிரோதமாகக் கைக்கடிகாரங்களை கடத்த முயன்றதாக அவர்மீது குற்றம் சாட்டித் தொடரப்பட்ட வழக்கில் கொழும்பு கூட்டுமாஜிஸ்டிரேட் திரு. எம். எம். ஜமீல், அவருக்கு இரண்டுமாதசிறைத் தண்டனை விதித்தார்.

சுங்கப்பகுதி அதிபரினல் விதிக்கப்பட்ட ரூ. 174,000 அபராதத்தை செலுத்த முடியாததால் கோவிந்தராவுக்கு சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

## சூ-என்-லாய் ஐ. அ. கு. செல்வார்

பீக்கிங், ஏப். 26

ஐக்கிய அரபுக் குடியரசுக்கு வரும்படி ஐ. அ. கு. பிரதமர் விங் கமாண்டர் அலிசாபரி விடுத்த அழைப்பை, சீனப் பிரதமர் திரு. சூ-என்-லாய் ஏற்றுக் கொண்டார். சீனப் பிரதமர் திரு. சூ-என்-லாய், ஐக்கிய அரபுக் குடியரசுக்கு எப்பொழுது விஜயம் செய்வார் என்பது அறிவிக்கப்படவில்லை.

## 8 மாதத்தின்பின் போஸ்கார்ட்

திருக்கோணமலை, வெள்ளி

சென்ற வருடம் செப்டம்பர் மாதம் 8-ம் திகதி திருகோணமலையிலிருந்து பதுளைக்குஅனுப்பப்பட்ட போஸ்ட்கார்ட் 8 மாதங்களின் பின்தான் உரியவருக்கு கிடைத்துள்ளதாக அறியப்படுகிறது.

சில இ. போ. ச. ஊழியர்கள் பல இடங்களுக்கு யாத்திரைசெய்து கொண்டிருந்த போது இந்த ஊழியர்களுள் ஒருவரான யுவதி ஒருவர் திருக்கோணமலையிலிருந்து இந்த போஸ்ட்கார்ட்டை பதுளையில் இ. போ. ச.வில் கடமையாற்றும் நண்பர்களுக்கு அனுப்பினராம்.


**விற்பனைக்கு**

C L 2844 ஒஸ்றின் கார் விற்பனைக்கு இருக்கிறது. 168, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 948


# செய்தி அனுப்பும் காட்டு மிருகங்கள்

கோலாலம்பூர், ஏப். 26

காட்டு மிருகங்களின்நடமாட்டம் பற்றி அறிவதற்காக மலாயாவில் உள்ள வைத்திய அதிகாரிகள் இககாட்டு மிருகங்களின் உடலில் தகவல்களை அனுப்புவதற்கான ரேடியோ கருவிகளை இணைத்து வருகின்றனர்.

காடுகளில் இஷ்டம்போலத் திரியும் காட்டு மிருகங்கள் கொடும் நோய்க்களாகின்றன. காட்டு மிருகங்களின் நடமாட்டத்தை அறிந்து இந்த நோய் பரவாமல் தடுக்க மலாயா வைத்திய ஆராய்ச்சிக் கழகத்தினர் முயன்று வருகின்றனர். இதற்காகவே காட்டு மிருகங்களின் உடலில் தகவல் அறிவிக்கும் ரேடியோக் கருவிகள் பொருத்தப்படுகின்றன. இந்தக் கருவிகள் பொருத்தப்பட்ட பிறகு இம்மிருகங்கள் இஷ்டம் போலத் திரியும்படி விட்டுவிடப்படுகின்றன. இந்த மிருகங்கள் சுமந்துசெல்லும் கருவிகளோ இரவு பகல் 24 மணி நேரமும் இவ்விலங்குகளின் நடமாட்டம் பற்றித் தகவல்களை அனுப்பிக்கொண்டே இருக்கின்றன. இத்தகவல்களை வைத்திய அதிகாரிகள் டிரான்ஸிஸ்டர் ரேடியோசகள் மூலம் பெற்று காட்டு மிருங்களின் நடமாட்டம், அவை எப்படி தங்கள் நேரத்தைச் செலவிடுகின்றன என்பனவற்றை அறிகிறார்கள். இம்மிருகங்களின் உடலில் பொருத்தப்படும் கருவி தீப்பெட்டியைவிடச் சிறியதாகும். இதன் எடை ஒரு அவுன்சுக்கும் குறைவானதே. இக்கருவி ஒன்றைத் தயாரிக்க ரூ. 36 செலவாகிறது.


**வைத்தியர்களுக்கு !**

தேவையான

ஜண்டுபாமசி, அலப்பிக்பாமசி மருந்துகள், சித்தவைத்தியமருந்துகள், மருந்துச்சரக்குகள்

சுத்தமாகவும் மலிவாகவும்

கிடைக்குமிடம்

**சுந்தரம் பிறதர்ஸ்**

(புதிய பஸ் நிலையத்திற்கு அருகில்)

73, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

# “அடுத்த சுற்றுப்பேச்சு இறுதியானது”

—புட்டோ

# “அயூப் - நேரு சந்திப்பு அடுத்த பேச்சுகளில் தெரியும்”

— சுவர்ண் சிங்

கராச்சி, ஏப். 26

**காஷ்மீர் மற்றும் அது சம்பந்தமான இதர பிரச்னைகள் குறித்து பாரத - பாகிஸ்தான் அதிகாரிகளுக்கிடையே அடுத்தமாதம் 15-ம் திகதி புதுடில்லியில் நடைபெறும் ஆருவது சுற்றுப்பேச்சு கடைசிப் பேச்சாகவிருக்கும் என்று பாகிஸ்தான் வெளிவிவகார மந்திரி திரு. புட்டோ தெரிவித்துள்ளார்.**

காஷ்மீர் மற்றும் அது சம்பந்தமான இதர பிரச்னைகள் குறித்து பாரத-பாகிஸ்தான் அதிகாரிகளுக்கிடையே கராச்சியில் நடைபெற்ற ஐந்தாவது சுற்றுப்பேச்சுக்கள் நேற்று முடிவடைந்தன.

### முன்னேற்றம் இல்லை

கராச்சியில் நடைபெற்ற ஐந்தாவது சுற்றுப்பேச்சுகளில் முன்னேற்றம் காணப்பட்டதாக மகாநாட்டு வட்டாரங்களில் தெரிவித்தபோதிலும் கராச்சிப் பேச்சுக்கள் நல்ல பலனைக் கொடுக்கவில்லை என்று மேற்கு ராஜதந்திர வட்டாரங்கள் கூறுகின்றன.

### அடுத்த பேச்சு இறுதிப் பேச்சு

கராச்சியில் நடைபெற்ற பாரத-பாகிஸ்தான் அதிகாரிகளுக்கிடையேயான ஐந்தாவது சுற்றுப்பேச்சுக்கள் நேற்று முடிவடைந்தன. பாகிஸ்தான் கோஷ்டியின் தலைவரும் பாகிஸ்தான் வெளிவிவகார மந்திரியுமான திரு. புட்டோ நேற்று நிருபர்கள் மத்தியில் பேசுகையில், காஷ்மீர் பிரச்னை குறித்து இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் மந்திரிகள் கட்டத்தில் அடுத்தமாதம் புதுடில்லியில் நடைபெறவிருக்கும் ஆருவது சுற்றுப்பேச்சுத்தான் கடைசிப் பேச்சாகவிருக்கும் என்றும், காஷ்மீர் பிரச்னையைச் சமாதானமாகத் தீர்த்துக் கொள்ளவே பாகிஸ்தான் முயற்சிக்கிறதென்றும் அடுத்த மாதம் நடைபெறவிருக்கும் ஆருவது சுற்றுப்பேச்சுக்களில் நல்ல முடிவுகள் காணப்படும் என்று தாம் எதிர்பார்ப்பதாகவும் கூறினர்.

### சுவர்ண் சிங் கருத்து

காஷ்மீர் பிரச்னை குறித்து பாகிஸ்தான் கோஷ்டியுடன் கராச்சியில் பேச்சுக்கள் நடத்திவிட்டு நேற்றுமாலை புதுடில்லி வந்துசேர்ந்த பாரதகோஷ்டியின் தலைவரும் பாரத ரயில்வே மந்திரியுமான சர்தார் சுவர்ண் சிங், பத்திரிகை நிருபர்கள் கேட்ட கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கையில், கராச்சியில் நடைபெற்ற பேச்சுகளில் பழைய அம்சங்கள் எதுவும் திரும்பவும் பரிசீலனை செய்யப்படவில்லையென்று கூறினர்.

### பேச்சுக்கள் தொடரலாம்

புதுடில்லியில் அடுத்தமாதம் நடைபெறவிருக்கும் ஆருவது சுற்றுப்பேச்சு, கடைசிப் பேச்சாகவிருக்குமா என்று நிருபர்கள் கேட்டதற்கு, திரு.சுவர்ண் சிங் பதிலளிக்கையில், எந்தப் பேச்சும் முடிவாகவிருக்க வேண்டுமென்று தாம் எப்பொழுதும் கருதியதில்லையென்றும் ஆருவது சுற்றுப்பேச்சுக்களில் நல்ல முடிவுகள் காணப்பட்டால் அதுவே கடைசிப்பேச்சாக விருக்கலாம் என்றும் ஆனல் ஏழாவது சுற்றுப்பேச்சுக்கு இடமிருக்கிறது என்று அடுத்த சுற்றுப்பேச்சுக்களில் கண்டால், சுற்றுப்பேச்சுக்கள் தொடர்ந்து நடைபெறலாம் என்றும் கூறினர்.

### சமாதானவழியைக் கடைப்பிடிக்கிறேம்

நிருபர்கள் மத்தியில் திரு. சுவர்ண்சிங் மேலும் தெரிவித்ததாவது:-

“காஷ்மீர் மற்றும் அது சம்பந்தமான பிரச்னைகளில் தீர்க்க வேண்டிய கருத்துக்கள் அதிகமிருக்கிறது. காஷ்மீர் பிரச்னையைச் சமாதான வழிகளின் மூலம் தீர்த்துவைக்கவேண்டுமென்ற கருத்தே பாரத-பாகிஸ்தான் நாடுகளில் நிலவுகிறது பிரச்னையைத் தீர்த்துவைப்பதில் இரண்டுநாடுகளும் அதிக அக்கறை கொண்டுள்ளதால், பிரச்னைகள்யாவு சுமுகமாகத் தீர்க்கப்பட்டுவிடுமென்றே நான் கருதுகின்றேன்.

### அரசியல் தீர்வு

கராச்சியில் நடைபெற்ற ஐந்தாவது சுற்றுப்பேச்சுக்களில் நாம் பழைய விஷயங்களைத் திரும்பவும் திரும்பவும் பரிசீலனைசெய்யவில்லை. முக்கியமாக, கராச்சிப் பேச்சுக்களில் நாங்கள் அரசியல் தீர்வு பற்றி விவாதித்தோம்.

### அயூப்-நேரு சந்திப்பு

பாரதப் பிரதமர் நேருவும் பாகிஸ்தான் ஜனதிபதி அயூப் கானும் சந்திப்பதற்கான தகுந்த சமயம் இன்னும் உருவாகவில்லை. இரண்டுநாட்டுத் தலைவர்களும் சந்திப்பதற்கான காலம் புதுடில்லியில் நடைபெறும் அடுத்த சுற்றுப்பேச்சுக்களின்போது முடிவுசெய்யப்படும்.

---

## 50,000 ஆண்டுக்கு முன்பிருந்த உயிர் இனங்கள்

லண்டன், ஏப். 26

50 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பாக பூமியில் உயிரினங்கள் வாழ்ந்ததற்கான தடயங்கள் பிரிட்டனில் வேல்ஸ் பகுதியில் உள்ள சியோகோன் குகையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன தொல் பொருள் ஆராய்ச்சியாளர் கோஷ்டியொன்று இவற்றைக் கண்டுபிடித்தது. இந்தக் குகை சுண்ணும்புக்கல் வெட்டி எடுக்கப்படும் இடத்திலுள்ளது. இப்பகுதியில் சுண்ணும்புக்கற்களை வெட்டியெடுக்கும் கம்பெனி இந்தக் குகையைப் பாதுகாக்க எண்ணியுள்ளது.

---

## தொழிலாளர் கழக மேதினவிழா

கொழும்பு, வெள்ளி

இலங்கைத் தொழிலாளர் கழகத்தின் மேதினவிழா, ஹட்டனிலுள்ள பௌத்த ஆலயத்துக்கு அருகில் நடைபெறும்.

---

## புற்றுநோய்க்கு 26,000 பேர் பலி

### புகைபிடிப்பதே காரணம்

லண்டன், ஏப். 25

கடந்த வருடத்தில் பிரிட்டனில் சுவாசப்பை புற்றுநோய் காரணமாக 26 ஆயிரத்துக்கும் அதிகமான பேர் இறந்தனர். இந்த மரணத் தொகை 1961-ம் ஆண்டில் ஏற்பட்டதைவிட சுமார் ஆயிரம் அதிகமாகும். இத் தகவலை வெளியிட்ட பிரிட்டிஷ் வைத்திய இலாகா மந்திரி எனேக் போவெல் கூறியதாவது:- சுவாசப்பை புற்றுநோயினல் இறப்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டே போகிறது. ஆனல் மற்ற வகை புற்றுநோய்களினல் இறப்பவர்களின் தொகை அதிகரிக்காமல் நிலையாக உள்ளது. சுவாசப்பை புற்றுநோயினல் ஏற்படும் மரணமானது மிகபயங்கரமானதாகும். புகைப் பிடிக்கும் பழக்கம் மட்டும் இல்லாமல் இருந்தால் இவ்வித மரணமே ஏற்படாது.

---

## தீயணைக்கும் படைக்கு பெண்கள்

பெர்லின், ஏப். 25

கிழக்கு ஜேர்மனியில் ஆள் பஞ்சம் காரணமாக தீயணைக்கும் படைக்கு பெண்கள் சேர்க்கப்படுகிருர்கள். பெண்களை மட்டுமே கொண்ட தீயணைக்கும் படைகள் அமைக்கப்பட்டு வருகின்றன. 16 வயதிலிருந்து 35 வயதுவரை உள்ள பெண்கள் தீயணைக்கும் படையில் சேர்த்துக்கொள்ளப்படுகின்றனர். “சோஷலிச பொருளாதார அமைப்பில் பலவேறு துறைகளில் பெண்கள் ஆண்களுக்குச் சமமாக பொறுப்பேற்பதைப் போலவே தீயணைக்கும் படையிலும் பெண்கள் சம உரிமையையும் முழுப்பொறுப்பையும் ஏற்கவேண்டும்” என்று இது குறித்து ஒரு கம்யூனிஸ்ட் பத்திரிகை கருத்து தெரிவித்துள்ளது.

---

## கடலின் அடித்தளத்தில் எண்ணெய்

லண்டன், ஏப். 25

பிரிட்டனுக்குக் கிழக்கே உள்ள வடகடலின் அடித்தளத்தில் எண்ணெயும், இயற்கை வாயுவும் கிடைக்கிறதா என்பதுபற்றி இந்த ஆண்டு கோடை காலத்தில் ஆராய்ச்சி மேற்கொள்ளப்படும்.

பிரிட்டனின் வாயு கவுன்சிலும், அமெரிக்க எண்ணெய்க் கம்பனியும் சேர்ந்து இந்த ஆராய்ச்சியை நடத்தும்.

---

## மலாயர்களுக்கு அதிக வேலை

கோலாலம்பூர், ஏப். 26

புதிதாக ஆரம்பிக்கப்படும் தொழில் நிறுவனங்களில் மலாயர்களை அதிக அளவில் வேலைக்குச் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று கட்டாயப்படுத்த சட்டம் கொண்டுவரப்படலாம் என்று மலாயா தொழில் அபிவிருத்திக் கண்ட்ரோலர் இங்கு கூறினர்.

மலாயாவில் மலாயர்களே பெரும் எண்ணிக்கையில் உள்ளனர். எனினும் கடற்தொழில் வர்த்தகத் துறைகளில் இவர்களது பங்கு மிகக் குறைவாகவே உள்ளது. உள்நாட்டு தொழில் நிறுவனங்கள் உள்ளூரில் தாங்கள் வேலைக்கு ஆள் எடுப்பதில் மலாய்களை அதிக அளவில் நியமிக்க வேண்டும் என்று சமீபத்தில் தொழில், வர்த்தக உதவி மந்திரி எச்சரிக்கை விடுத்தார்.

இதன் பேரில் 28 புதிய தொழில் நிறுவனங்கள் கூடிய வரையில் மலாயர்களை அதிக அளவில் வேலைக்கு எடுத்துக் கொள்ள முயற்சிப்பதாகத் தெரிவித்துள்ளன.

---

## “மத்திய அரசாங்கத்தில் ஹிந்தியை திணிக்க முடியாது”

### அலஹபாத் கூட்டத்தில் பிரதமர் நேரு

அலஹாபாத், ஏப். 26

“ஹிந்தி பேசாத மக்கள்மீது, அவர்களது சம்மதம் பெருமல் ஹிந்தியைத் திணிப்பது விவேகமற்றது மத்திய அரசாங்கத்தில் ஹிந்தியைத் திணிக்கமுடியாது” என்று அலஹாபாத்திலுள்ள கிராமமொன்றில் நடைபெற்ற கூட்டத்தில் நேரு கூறினர்.

ஆட்சிமொழி மசோதா சம்பந்தமாக மக்களிடையே அபிப்பிராயபேதம் ஏற்பட்டிருப்பதை நான் உணர்வேன். முக்கியமாக ஹிந்திபேசாத மக்களிடையேதான் இவ்வித அபிப்பிராயபேதம் நிலவுகிறது. ஹிந்திபேசாத மக்களின்மீது ஹிந்திமொழி சுமத்தப்படுவதை நான் வரவேற்க மாட்டேன். ஹிந்திமொழியை மற்றவர்கள் நன்கு புரிந்துகொள்ளக்கூடிய முறையில், எளியமுறையில் பரப்பவேண்டும். இந்தத்தொண்டில் பத்திரிகைகளும், எழுத்தாளர்களும் ஈடுபடல் வேண்டும்.

பாரதத்தில் ஹிந்திப் பத்திரிகைகளின் தொகை குறைவாகவிருக்கிறது. ஹிந்திப் பத்திரிகைகள் அதிகம் வெளிவரவேண்டும். எல்லோரும், முக்கியமாக . ஹிந்திமொழி தெரியாதவர்கள் புரிந்து கொள்ளக்கூடிய முறையில் எளியமுறையில் ஹிந்தி வெளியாகவேண்டும்.

கவி ரவீந்திரநாத் தாகூரின் இலக்கியங்களை எல்லோரும் விரும்பிப்படிக்கிருர்கள். சாதாரணமனிதன் புரிந்துகொள்ளக்கூடிய முறையில் அவை வெளியாகியிருப்பதே இதற்குக் காரணமாகும். ஹிந்திக்கும் ஆங்கிலத்துக்கும் சச்சை இல்லை. ஆங்கிலம் துணையாகவிருப்பதால் ஹிந்தி வளர்ச்சியடையும்.

### சீன ஆக்கிரமிப்பு

சீனவின் ஆக்கிரமிப்பினல் நமக்குத் தோன்றியிருக்கும் இக்கட்டான நிலைமையைத்தீர்த்து வைக்க மக்கள் முன்வரவேண்டும். சீன ஆக்கிரமிப்பையும் அதனல் தோன்றியிருக்கும் வறுமையையும் போக்க மக்களின் மனதில் சேவை மனப்பான்மை தோன்றவேண்டும்.

நமது நாட்டில் உற்பத்தி இப்போது அதிகரித்து வருவதற்கு தேசநலனில் மக்கள் காட்டும் தீவிர அக்கறைதான் காரணம். உற்பத்தியைப் பெருக்குவதில் ஒவ்வொருவரும் ஈடுபடல் வேண்டும். அபிவிருத்தித் திட்டங்களை ஒத்திப்போடும்படி சிலர் கேட்கிருர்கள். ஆனல் அப்படிச் செய்ய முடியாது. சீன ஆக்கிரமிப்பினல் நாட்டில் தோன்றியிருக்கும் நிலைமையை நிவர்த்திசெய்வதற்கு நாட்டின் உற்பத்தி வெகுவாக அதிகரிக்க வேண்டும். உற்பத்தியை கூடுதலாக்குவதற்கான வசதிகளைச் செய்வதற்கு அரசாங்கம் ஆயத்தமாகவிருக்கிறது. உற்பத்திப் பெருக்கமே இப்போது நாட்டுக்குத் தேவை.”

பிரதமர் நேரு இங்கு ஒரு குழந்தைகள் ஆஸ்பத்திரிக்கான அடிக்கல்லையும் நேற்று நாட்டினர்.

---

## சர்வதேச கமிஷன் கோஷ்டி ஜார்ஸ் சென்றது

### லாவோஸ் நிலைமைகுறித்து மாஸ்கோவில் ஹரிமன்பேச்சு

லாவோஸ், ஏப். 26

ஜார்ஸ் சமவெளிப் பிரதேசத்தின் நிலைமைபற்றி நேரிற் கண்டறிவதற்காக, சர்வதேச கட்டுப்பாடு கமிஷனின் கோஷ்டியொன்று ஜார்ஸ் சமவெளிப் பிரதேசத்திற்குச் சென்றுள்ளது. லாவோஸ் பிரதமர் திரு. சுவர்ணபூவாவின் விருப்பத்துக்கிணங்கவே இத்தூதுகோஷ்டி அங்கு சென்றுள்ளது.

### அவரல் ஹரிமன் மாஸ்கோ சேர்ந்தார்

லாவோஸ் நிலைமை குறித்துப் பேச்சுக்கள் நடத்தும் பொருட்டு அமெரிக்க ஜனதிபதி கெனடியின் விசேஷ தூதர் திரு. அவரல் ஹரிமன் நேற்று மாஸ்கோ போய்ச் சேர்ந்தார். திரு. ஹரிமன் லாவோஸ் நிலைமை குறித்து, சோவியத் அரசாங்க அதிகாரிகளுடன் பேச்சுக்கள் நடத்துவார்.

### கெனடியின் கடிதம்

லாவோஸ் குறித்து அமெரிக்க ஜனதிபதி கெனடியனுப்பிய கடிதத்தையும் திரு. ஹரிமன் அங்கு கொண்டு செல்கிருர். இந்தக் கடிதத்தை அவர் ரஷ்யப் பிரதமர் திரு.குருஷ்சேவிடம் கொடுப்பார்.

லாவோஸில் மோசமான நிலைமை எதுவும் தோன்றினல் அதை உடன் அடக்கிவிடும் பொருட்டு அமெரிக்க படைகள் உஷார்படுத்தப்பட்டிருப்பதாக ஒரு செய்தி கூறுகிறது. லாவோஸுக்கு வடகிழக்கில் சுமார் 1,500 மைல் தூரத்தில் அமெரிக்கப்படைகள் உஷாராகவிருக்கும்படி உத்தரவிடப்பட்டிருக்கின்றது.

---

## ஏடனில் ரூ. 27 கோடி கல்விதிட்டம்

ஏடன், ஏப்ரல் 26

வருகிற மூன்று ஆண்டுகளில் கல்வி வளர்ச்சிக்கென சுமார் 27 கோடி ருபாயை ஏடன் அரசாங்கம் செலவு செய்யும் என்று கல்வி அமைச்சர் தெரிவித்தார். 123 ஆதாரப் பள்ளிகளும், 11 இடைநிலை, உயர்நிலைப் பள்ளிகளும், இரண்டு ஆசிரியப் பயிற்சிப் பள்ளிகளும் திறக்சப்படும். பிரிட்டனுக்கு உபகாரச் சம்பளத்துடன் 85 மாணவர்கள் அனுப்பிவைக்கப்படுவார்கள்.

---

## கென்னடி-பியர்ஸன் சந்திப்பு

வாஷிங்டன், ஏப்ரல் 26

அமெரிக்க ஜனதிபதி கென்னடியும், கனடாவின் புதிய பிரதமர் திரு. லெஸ்டர் பியர்ஸனும் வருகிற மாதத்தில் சந்திப்பார்களென எதிர்பார்க்கப்படுகிறது. எனினும் அவர்கள் ஒட்டாவா அல்லது வாஷிங்டனில் சந்திக்கமாட்டார்களென ஜனதிபதியின் பத்திரிகைக் காரியதரிசி தெரிவித்தார்.

அமெரிக்க அரசாங்கமும், கனேடிய அரசாங்கமும் மே மாதத்தில் அமெரிக்க ஜனதிபதியும், பிரதமரும் சந்திப்பதற்கான பேச்சுவார்த்தைகளை தற்பொழுது நடாத்தி வருவதாக பத்திரிகைக் காரியதரிசி மேலும் தெரிவித்தார்.

### மணி வாக்கு

மக்களிடம் மட்டுமன்றி, நிலத்தில் ஊரும் உயிர்ப் பிராணிகளிடமும் அன்பும் சகோதரத்துவமும் காட்ட என்சமயம்போதிக்கிறது. ஒரே கடவுளிடமிருந்து எல்லா உயிர்களும் வந்தமையால்,உயிர்களெல்லாம் ஒன்றேயாகும்.

— மகாத்மாகாந்தி.


# ஈழநாடு

EELANADU: National Tamil Daily, Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna
Phone 389

யாழ்ப்பாணம் சுபகிருது ஆண்டு சித்திரை மீ 14 உ (27-4-63)


## ஆங்கில உபயோகம்

இப்போது மொழி விஷயமாக இந்தியாவில் ஏற்பட்டுள்ள தகராறு இந்தியாவின் ஒற்றுமையைக் குலைப்பதுடன், அதன் பாதுகாப்புக்கும் சுதந்தரத்துக்கும் ஆபத்து ஏற்படுத்துவதாகும். அதுமட்டுமன்றி, சிறப்பாக இலங்கையிலுள்ளமொழிவெறியர்களுக்கு தூபம் போட்டு அவர்களுக்குத் தவறான வழி காட்டுவதாகவுமிருக்கும்.

இந்தியாவின் அரசியல் அமைப்புத் திட்டத்தைத் தயாரித்த அரசியல் நிர்ணய சபையில், இந்தி அரசாங்க மொழியாக இருக்கவேண்டுமென்ற தீர்மானம் ஒரே ஒரு அதிகப்படி வாக்கினால் நிறைவேற்றப்பட்டது. ஏகமனதாகவோ, பெரிய 'மெஜாரிட்டி' வாக்கினாலோ நிறைவேற்றப்படவில்லை. 'இந்தி மட்டுமே' அரசாங்க மொழியாக இருக்குமென்றும் அது கூறவில்லை. அரசியல் சட்டம் அமுலுக்கு வந்து 15 வருடகாலம்வரை ஆங்கிலம் அரசாங்க மொழியாக நீடிக்குமென்று அதே சட்டம் அனுமதித்தது. அதன்படி 1965-ம் வருடம் ஜனவரி மதாம் 26 திகதிக்குப்பின் ஆங்கிலத்தை அரசாங்கமொழியாகப் பாவிக்க முடியாமற் போகும்.

அப்படியான நிலை ஏற்படின் இந்திதெரியாத கோடிக்கணக்கான மக்களுக்குப்பெரும் சங்கடம் ஏற்படுமென்பதை உணர்ந்த பிரதமர் நேரு, ஒரு வாக்குறுதி அளித்தார். அவர்கள் விரும்பும்வரை ஆங்கிலமும் நீடித்து உபயோகிக்கப்படுமென்று கூறினார். இந்த உறுதிமொழியை ஓரளவு அமுலுக்குகொண்டுவரும் வகையில், ஒரு மசோதாவை, ஆங்கில உபயோகத்தை நீடிக்கும் நோக்கத்துடன், டில்லி அரசாங்கம் கொண்டுவந்துள்ளது. இதை இந்தி வெறியர்கள் எதிர்க்கின்றனர். இம்மசோதா நேருஜியின் உறுதிமொழியைப் பூரணமாக நிறைவேற்றவில்லை என்று தமிழகத்தில் இதை எதிர்த்து பலத்த கிளர்ச்சி நடைபெறுகின்றது. இந்த மொழித் தகராறு மேலும் நீடிப்பதாயின் நாட்டின் ஒற்றுமை குலைவதுடன், பாதுகாப்பையும் பலப்படுத்த முடியாதுபோகும்.

இப்போது இந்தியாவில் அவசரகாலம் நீடிக்கப்பட்டுள்ளது. இக்கட்டத்தில் தீவிர அபிப்பிராயபேதம் விளைவிக்கக்கூடிய எந்த மசோதாவையும் கொண்டுவராமல், ஏற்கனவே உள்ள நிலைமையையே, மொழிமுதலியன உள்ளிட்டு, நீடித்துவிடுவதே விவேகமாகும். அவ்விதமே செய்ய அரசாங்கத்துக்கு விசேஷ அதிகாரமுண்டு. அப்படிச் செய்வதைவிட்டு, மொழிவெறியர்களுக்கு இடம்கொடுக்கக்கூடிய வகையில் இம்மசோதாவைக் கொண்டுவந்திருக்கத் தேவையில்லை.

இந்திபேசாத மக்கள், இந்தி வேண்டாமென்று கூறவில்லை. ஆங்கிலமும் நீடிக்கவேண்டுமென்றுதான் கேட்கின்றனர். தங்களது தாய்மொழிகள் அரசாங்க மொழியாக வேண்டுமென்றும் கோரவில்லை. அப்படி இருக்க, அவர்களது மிதமான இக்கோரிக்கையையும், மொழிவெறியர்கள் எதிர்ப்பதாயின், அதற்கு நேரு அரசாங்கம் சற்றும் இடமளிக்கக்கூடாது. இம்மசோதா பற்றி உள்நாட்டு மந்திரி திரு சாஸ்திரி பேசுகையில், ஒரு பெரியதவறு செய்துவிட்டார். "இந்தி மட்டுமே அரசாங்க மொழியாக இருக்கும்" என்ற கொள்கையை இந்திய மக்கள் வெகுவாக ஒப்புக்கொண்டுவிட்டதாகச் சொன்னார். இதை உடன் திராவிடமுன்னேற்றக் கழக மெம்பர்கள் "இல்லை இல்லை" என்றுகூறி மறுத்தார்கள். எக்காரணத்தைப் பற்றியும் ஆங்கில உபயோகத்தைக் கைவிடுவதாயின் இந்தி தெரியாதவர்களிடை பலத்த எதிர்ப்பு ஏற்பட்டு, உள்நாட்டு அமைதியும் குலையக்கூடும். இதற்கு இந்திய அரசாங்கம் இடமளிக்காதென்றே நம்புகிறோம்.

இலங்கையிலே சிங்களம் மட்டும் சட்டம் பீரங்கிக் காவலுடன் நிறைவேற்றப்பட்டு, தமிழரின் பலத்த ஆட்சேபத்துக்கிடையே அமுல் நடத்தப்படுகின்றது. ஆங்கிலம் இதற்கிடையே பயன்படுத்தப்பட்டு வருகிறதெனினும், அதற்குச் சட்ட ஆதாரம் எதுவுமில்லை. எச்சமயமும் அதுவும் கைவிடப்படலாம். பல இலாகாக்கள் அப்படியும் வெகுவாகச் செய்துவருவதைப் பார்க்கின்றோம். இது சிறுபான்மை மக்களுக்குப் பெரிய அநீதியாகவும் வேதனை அளிப்பதாகவும் உள்ளது. இந்த அவலநிலையை மாற்றவும் மொழிவெறியர்களுக்கு இடம் கொடாமல் தேசிய ஒற்றுமையைப் பலப்படுத்தவும் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டியது எவ்வளவு அவசரமென்பதை இந்திய சம்பவங்கள் நமக்கு உணர்த்துகின்றன.

## 'சரக்குகளை இடமாற்றம்செய்ய அதிக பணம் கொடுக்கப்பட்டது'

கொழும்பு, வெள்ளி

உணவு இலாகாவின் சரக்குகளை இடமாற்றம்செய்வதற்கு ஐக்கிய கூட்டுறவு தொழிலாளர் யூனியன்களுக்கு இலட்சக்கணக்கான ரூபா மேலதிகமாகக் கொடுக்கப்பட்டு வருவதாக பூர்வாங்க கணக்கெடுப்பில் தெரியவருகிறது.

குருநாகலை, கண்டி, பதுளை ஆகிய பகுதிகளுக்கு அரிசியும் வேறு உணவுப்பொருட்களும், விநியோகம் செய்த கூலியாகவே இந்த மேலதிக பணம் கொடுக்கப்பட்டதாம்.

# இந்திமொழியில் கம்பராமாயணம்

பாட்னா, ஏப்ரல் 23

வேறு மொழிகள் எதிலும் இதுவரை கம்பராமாயணம் மொழிபெயர்க்கப்படவில்லை. முதல் முறையாக இத் தமிழ்ப் பேரிலக்கியம் இந்தி மொழியில் பெயர்க்கப்பட்டிருக்கிறது. 1200 ஆண்டுகளுக்கு முன் கம்பரால் எழுதப்பெற்ற இத் தமிழ்க் காவியத்தை பீகார் அரசாங்கத்தின் ராஷ்டிர பாஷா பரிஷத் இந்தியில் மொழிபெயர்த்து வெளியிட்டிருக்கிறது.

இந்தி மொழியில் பெயர்க்கப்பட்டிருப்பதில் இது இரண்டாவது இராமாயணம் ஆகும். முதலாவதாகத் தெலுங்கு மொழியிலிருந்து ரங்கநாத் இராமாயணம் இந்தியில் மொழிபெயர்க்கப்பட்டது. கன்னடம், மலையாளம் ஆகிய மொழிகளில் உள்ள இராமாயணங்களையும் இந்தியில் மொழிபெயர்க்கப் பரிஷத் முடிவுசெய்திருக்கிறது.

கிரேக்கப் பேரிலக்கியமான இலியதுக்கும், ஆங்கில இலக்கியமான சுவர்க்க நீக்கத்திற்கும் ஒப்பானதாகக் கம்பராமாயணம் கருதப்படுகிறது. வால்மீகி இராமாயணத்துக்கு அடுத்தபடியாகத் தொன்மை வாய்ந்த கம்பராமாயணம் அந்தச் சமஸ்கிருத மூல இலக்கியத்தை விட நயஞ்செறிந்த முறையில் எழுதப்பட்டது என்றும் கருதப்படுகிறது.

வால்மீகி இராமாயணத்தை அடிப்படையாகக்கொண்டு கம்பர் தன் இலக்கியத்தைப் படைத்திருந்தாலும், இராமபிரானுடைய வாழ்க்கை தென்னாட்டுக்குப் பொருந்தியதாக இருக்கும் வகையில் மூலத்தை 101 இடங்களில் மாற்றி எழுதியிருக்கிறார்.

இந்த மாற்றங்களை இராமாயணத்தில் செய்ததன்மூலம் நம்முடைய இலக்கியத்திறனையும், கற்பனையாற்றலையும்கம்பராமாயணத்தில் கம்பர் பதித்துச் சென்றிருக்கிறார்.

கம்பராமாயணத்தில் காணப்படும் ஒவ்வொரு நிகழ்ச்சியும் தொடக்கம்முதல் இறுதிவரை முழுமைபெற்றதாகத் தன்னிறைவுகொண்டதாக இருக்கிறது. தொடங்கி வளர்ந்து உச்சக்கட்டத்தை எட்டும் நாடகத்தின் அம்சங்களைப் போன்ற இலக்கியநயத்தை அவற்றில் காணலாம்.

வால்மீகி கடவுளின் அற்புத சிருஷ்டியாக இராமனைச் சித்தரித்திருக்கிறார். கம்பரோ அதற்குமேல் ஒருபடி உயர்ந்து சென்று இராமனைக் கடவுள் அவதாரமாகக் காட்டியிருக்கிறார்.

வைணவ சிமயத்தவராகக் கம்பர் இருந்தாலும் எல்லாச் சமயங்களையும் சேர்ந்த தமிழ் மக்களுக்குச் சுவையும் பயனும் தரும் 10,500 பாக்களை எழுதி வைத்திருக்கிறார். சைவத்தையும், வைணவத்தையும் தம்முடைய பொருள்செறிந்த, நயமான இலக்கியத்தின் மூலம் இணைத்தவர் கம்பர் என்று போற்றப்படுகிறார்.

அக்பரின்காலத்தில் இந்தி இராமாயணத்தை எழுதுவித்த துளசிதாசர் இந்தி மொழியில் ஆக்கப்பட்ட கம்பராமாயணத்தின் சுவையைக் காசியில் கங்கைக்கரையில் இருந்து சுவைத்திருக்கிறார் என்றும் கூறப்படுவதுண்டு. இராமரைக் கடவுளாகவே துளசிதாசரும் கண்டவர் என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் கம்பராமாயணத்துக்கும் துளசிதாஸ் இராமாயணத்துக்கும் நிறைய ஒற்றுமை உண்டு.

இராமபிரானுடைய வாழ்க்கை குறித்து டாக்டர் பி. என். மிஷ்ரா. கம்பராமாயண இந்தி மொழிபெயர்ப்பில் மிக விரிவாக முன்னுரையொன்று எழுதியிருக்கிறார். வால்மீகி இராமாயணத்துக்குக் கம்பராமாயணம் எந்தவகையிலும் குறைந்ததில்லை என்று அவர் அதில் குறிப்பிட்டிருக்கிறார்.

கம்பராமாயணம் இதுவரையிலும் எந்தமொழியிலும், ஆங்கிலத்தில்கூட மொழி பெயர்க்கப்படவில்லையென்பது ஆச்சரியமாக இருக்கிறது.

## மாணவர் புகைக்கத் தனி அறை

நியுயார்க், ஏப் 26

அமெரிக்காவிலுள்ள இல்லியனுயில் மாநிலத்தில், மேடிசன் என்னும் ஊரிலுள்ள உயர்நிலைப் பள்ளியில் மாணவர்கள் பிகை புடிப்பதற்கென்று தனி அறை ஒன்று ஒதுக்கி விடப்பட்டுள்ளது. 'மாணவர்கள் புகைபிடிக்கிறார்களா இல்லையா என்று மறைந்து மறைந்து குடிக்கும் அவர்களை பார்த்து எனக்கு அலுத்து விட்டது. சிறுவர்கள் புகை பிடிக்கக்கூடாதுதான்; ஆனால் குடிக்கிறார்களே; மறைந்து குடிப்பதைவிட வெளிப்படையாகக் குடிக்கட்டுமே என்றுதான் இந்த ஏற்பாட்டைச் செய்தேன்' என்று பள்ளித் தலைமையாசிரியர் கூறினார். பிள்ளைகளின் பெற்றோர் இதைக் கண்டித்து ஒரு கூட்டம் போடப்போகிறார்கள்.

## மரங்களின் கீழ் வகுப்புகள்

மகமன, வெள்ளி

இங்குள்ள அரசினர் பாடசாலையில் பிள்ளைகளுக்கு போதியளவு வகுப்புறைகளும் தளபாடங்களும் இல்லாததால், மிகவும் கஷ்டப்படுகிறார்கள். பாடசாலை வளவிற்குள் நிற்கும் பெரிய மரங்களின் கீழ் சில வகுப்புகள் நடைபெற்றுவருகிறது. மாணவர்கள் நிலத்திலிருந்தபடியே கல்வி கற்று வருகிறார்கள்.

## சனசமூகநிலைய 20-வது ஆண்டுவிழா

அளவெட்டி, வெள்ளி

அளவெட்டி வடக்கு கலாசேவா சனசமூக நிலையத்தின் 20-வது ஆண்டு நிறைவிழா அம்பிகா வாசிகசாலை மண்டபத்தில் இம்மாதம் 28-ம் திகதி நடைபெறும். உள்ளூராட்சி உதவி துணையாளர் திரு. கி சி. மாணிக்கவாசகர் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் எம். பிக்கள் உட்படப் பலர் சொற்பொழிவராற்றுர்கள்.

## பாராட்டு வைபவம்

மயிலிட்டி, வெள்ளி

மயிலிட்டி கிராமசபையின் அங்கத்தவர் திரு. க. பொன்னம்பலம், யாழ்ப்பாணம் கூட்டுறவு வங்கி சேவையிலிருந்து இளைப்பாறுவதை முன்னிட்டு அன்னாருக்கு பாராட்டு வைபவம் ஒன்றை நடாத்த ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. பாராட்டு வைபவம் நாளை மயிலிட்டி தெற்கு பாலர் ஞானோதய விதியாசாலையில் நடைபெறும்.

## தவறான வழியில் நிதி சேகரிப்பு

புங்குடுதீவு, வெள்ளி

நயினாதீவு நாகபூஷணி அம்மன் கோயில் தண்ணீர்ப்பந்தல் நிதிக்கு புங்குடுதீவு கிராமசபையின் முன்னாள் தலைவர் திரு. க. செல்லத்துரையின் பெயரைச் சொல்லி பணம் சேகரிக்கப்படுகிறதென்றும் இந்த விஷயத்தில் பொதுமக்கள் எச்சரிக்கையாக இருக்கும்படியும் தெரிவிக்கப்படுகிறது.

## ஐயாறன் எழுதுவது

டில்லி லோகசபையிலே இந்தி வெறியர்களில்சுவாமியார் ஒருவர் இருக்கிறாராம். அவர் பெயர் சுவாமி இராமேச்வரானந்தா. ஆங்கில உபயோகத்தை நீடிக்க வேண்டுமென்று அங்கு கொண்டுவரப்பட்டுள்ள மசோதாவை எதிர்த்து சுவாமியார் கலாட்டா செய்தாராம். அவரை சபைக் கூட்டத்துக்கு வரமுடியாமல் தடுத்து வைக்க வேண்டியதாயிற்றும்.

பின்னர் அவர் என்ன செய்தாராம் தெரியுமா? சபையிலே ஹோமம் வளர்ப்பதற்கு வேண்டிய சுள்ளிகள், தர்ப்பை, இருடம்ளரில் தண்ணீர், நெய், தீப்பெட்டி எல்லாம் ஒருதட்டில் எடுத்துக்கொண்டு,சபைக்குள் திடீரென நுழைந்தார். தாம் சபைக்குள்ளாக ஹோமம் வளர்த்து மோசமான இந்த மொழிகள் மசோதாவை அதில் போட்டுத் தகனம் செய்யப் போவதாகக் கூறவே, காவலர்கள் திகைத்துப் பாயினர்.

* * *

சபைத் தலைவருக்கு இது பற்றி சுவாமியார் ஒருசீட்டு எழுதி அனுப்பினர். ஹோமம் செய்ய அனுமதி கேட்டார். எவ்வித தீயும் அங்கு வளர்க்கப்படாதென்று சபாநாயகர் மறுத்துவிடவே "சபைப்பிரதேசத்தில் பலவித சிகரெட்டும், சுருட்டும் புகைத்து, மச்சமாமிசம் சாப்பிட்டு, கீழ்த்தரப் பேச்சுகள் பேச மெம்பர்களுக்கு முடிகையில் அப்பகுதியைப் புனிதம் செய்ய எனக்கு உரிமை உண்டுதானே" என்று வாதித்தார். பயனில்லை.

பின்னர் சுவாமிக்கும், சில காங்கிரஸ் மெம்பர்களுக்கும் வாக்குவாதமேற்பட்டு சுள்ளி, தர்ப்பை எல்லாம் அகற்றப்பட்டுவிட்டன. சுவாமிகள் சார்பாக எதிர்க்கட்சி மெம்பர்கள் குறுக்கிட்டு, காங்கிரஸ் எம். பி.க்கள் செய்ததைப் பலமாக ஆட்சேபித்தனர். அமளி பெரிதாகிவிடவே, பார்லிமெண்ட் விவகார மந்திரி சத்யநாராயணசின்ஹா தலையிட்டு அடிதடி ஏற்படாமல் தடுத்தார்.

ஆனால் சுவாமியார் பார்லிமெண்டுக்கு வெளியேயுள்ள புல்வெளிக்குச் சென்று பத்மாசனத்தில் வெகுநேரம் அமர்ந்திருந்தார். மசோதாவை வாபஸ் வாங்கும்வரை தாம் அங்கேயே இருக்கப் போவதாக அவர் பத்திரிகைக்காரர்களிடம் அறிவித்தாராம்.

உலகப்பற்றுகள் ஒன்றும் வேண்டாமென்று துறவியான பிறகும் கூட, எவ்வளவுமொழி வெறி! டில்லியிலும்மொழி வெறி எப்படியெல்லாம் கூத்தாடுகிறதென்பதைக் காட்டவே இதை இங்கு எழுதினேன்.

* * *

காரைநகர் சிவன்கோவிலில் கோபுரம், மூலஸ்தானம் தேர் முதலியவை கட்ட அந்த ஊர்ப் பிரமுகர்கள் கூடித் தீர்மானித்துள்ளார்கள். முன்மண்டபத்திலே அவர்களெல்லாம் ஒழுங்காகக் கூடியிருந்த காட்சி, தில்லை மூவாயிரவர் கூட்டத்தை நினைவுபடுத்துவதாக இருந்தது. ஊர் பொதுவிஷயங்களையும், தகராறுகளையும் பற்றி யோசித்துத் தீர்க்க இப்படித்தான் கோவிலில் ஊர்பிரமுகர்கள் சபை கூடுமாம். அந்தப்பழக்கம் மீண்டும் ஏற்பட்டால் நமது பலசமூகப் பிரச்னைகளும் வழக்குகளும் சுலபமாகத் தீர்ந்து சமூகம் எவ்வளவோ முன்னேறலாம்.

இந்தக் கைங்கரியத்துக்கு ஊர்மக்கள் தாராளமாக நன்கொடை அளிப்பதாகத் தெரிகிறது. இத்திருப்பணி வேலைகள் பூர்த்தியானால் காரைநகரின் அழகும் மகிமையும் பெரிதும் ஓங்கிவிடும்.

* * *

யாழ்ப்பாண மாநகரசபை

(6ம் பக்கம் பார்க்க)

# 'ஞானசீகதேரோவின் கருத்து தவறான எண்ணத்தை ஏற்படுத்தும்'

## பார்லிமெண்டரி குழு கண்டனம்

கொழும்பு, வெள்ளி

நாட்டின் பிரச்னைகளைத் தீர்ப்பதற்கு பிரதம மந்திரி தன் எண்ணப்படி நடக்க சர்வாதிகார ஆட்சி ஏற்படுத்தவேண்டும் என்று ஞானசீகதேரோ தெரிவித்த கருத்தை மறுத்து அரசாங்க பாராளுமன்றக்குழு ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேற்றியது.

தவணைமுறையில் காணிகள் வழங்குவதற்கு மாவனல்ல எம். பி. திரு. பி. ஆர். ரத்னயக்கா கொண்டுவந்த பிரேரணை இரு வாக்குகளால் தோல்வியடைந்தது.

சபைமுதல்வர் திரு. சி. பி. டி' சில்வா தலைமைவகித்தஇக் கூட்டத்திற்கு பிரதம மந்திரி சமுகமளிக்கவில்லை.

ஆஸ்பத்திரி சுவீப் நடைமுறைகளைப்பற்றியும் விவாதிக்கப்பட்டது.

உள்நாட்டு வீடமைப்புஅமைச்சின் நிரந்தரக் காரியதரிசி திரு. வி. சி. ஜெயசூரியாவின் சேவையை நீடிக்கவேண்டுமென ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

ஞானசீகதேரோ பத்திரிகைக்கு வெளியிட்ட அறிக்கை சம்பந்தமாக போக்குவரத்து மந்திரியின் பாராளுமன்றக் காரியதரிசி திரு. தென்னக்கோன் கூறியதாவது:-

இவருடையஅறிக்கை பொது மக்களுக்குத் தப்பபிப்பிராயத்தை உண்டுபண்ணும். ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்கும் இதே அபிப்பிராயம் இருப்பதாக மக்கள் எண்ணுவார்கள். ஞானசீக தேரோவால் வெளியிட்ட கருத்தை எந்த ஜனநாயக கட்சியும் ஏற்றுக்கொள்ளமாட்டாது இவருடைய அபிப்பிராயங்கள் காலஞ்சென்ற திரு பண்டார நாயக்காவின் கொள்கைக்கு வேறுபட்டவை. ஜனநாயக அமைப்பையே காலஞ்சென்ற பண்டாரநாயக்கா விரும்பினர்.

ஞானசீகதேரோவின் அறிக்கை ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் வளர்ச்சியைத் தடைசெய்யக்கூடியதாயிருப்பதால், நாங்கள் ஒன்றுசேர்ந்து அந்த அறிக்கையை எதிர்க்கவேண்டும் என்று யட்டிநுவர எம். பி. திரு. வீரசேகரா கூறினர்.

ஞானசீகதேரோ ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியுடன் நெருங்கிய தொடர்பு வைத்திருந்தபோதிலும், இப்படியான அறிக்கை வெளியிடுவதன்மூலம், கட்சிக்குத் தீங்கு விளைவிக்கிறார் என்று வீரசேகரா மேலும் கூறினர்.

ஞானசீகதேரோ சுதந்திரக் கட்சியில் அங்கத்தவராயிருந்தால் அவரை உடனடியாக வெளியேற்றவேண்டுமென்றும், அவர் கட்சியின் ஆதரவாளர்களில் ஒருவராக இருந்தால் அவரை ஒன்றும் செய்ய வழியில்லை யென்றும் செனட்டர் திரு. வீரவிமலரத்ன கூறினர்.

நிவித்திகல எம். பி. திரு. ஸ்ரான்லி மொலிகொட பேசும் போது சுதந்தரக் கட்சியின் ஆதரவாளரொருவர் சர்வாதிகார ஆட்சியைப்பற்றிக் கருத்து தெரிவித்து, கட்சியின் செல்வாக்கை அதிகம் குறைத்துவிட்டதாகக் கூறினர்.

அரசாங்க பாராளுமன்றக் குழுவின் தீர்மானத்தின்படி நடவடிக்கை எடுக்கும்படி பிரதம மந்திரியைக் கேட்டுக்கொள்வதென ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

தவணை முறையில் காணி வழங்கும் பிரேரணை சம்பந்தமாக திரு. பி. ஆர்.ரத்னயக்கா பேசியபோது கூறியதாவது:-

தற்பொழுதுள்ள முறையில் சாதாரண மனிதன் காணி வாங்குவது முடியாமலிருக்கிறது. காணிகளின் விலைமதிப்பு அதிகமாயிருப்பதால் உடனடியாக முழுத்தொகையும் கட்டமுடியாமலிருக்கிறது. ஆதலால் அரசாங்கம் விலையுயர்ந்த காணிகளை வாங்கி தவணை முறையில் மக்களுக்கு வழங்க வேண்டும்.

கட்டுகம்பொல எம். பி. திரு. லீலாநந்த வீரசேகரா கூறியதாவது:- பல தொகுதிகளுக்கு ஆஸ்பத்திரி சுவீப் பணம் பிரித்து வழங்கப்படுமென்று 1960-ம் ஆண்டு முதல் வாக்குறுதியளிக்கப்பட்டு வந்துள்ளது. எனது தொகுதிக்கு 40,000 ரூபா ஒதுக்கப்பட்டபோதும் இதுவரை தரப்படவில்லை. இதைப்பற்றி நான் விசாரணைசெய்தபோது பணம் வரவில்லையெனத் தெரியவந்தது.

### "நேர்மைக்கு இடமில்லை"

— ராஜரத்ன

சொர்ணதோட்டம், வெள்ளி

"பௌத்தர்களின் உரிமைகளுக்காகப் போராடும் சில பௌத்த ஸ்தாபனங்களைச் சேர்ந்த அங்கத்தவர்கள் பழிவாங்கப்படுகிறார்கள். ஆனால் தேச நலனில் அக்கறையில்லாதவர்கள் திறைசேரியில் உயர்தர பதவிகள் வகிக்கின்றனர்" என்று பத்தேகம என்ற இடத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் ஜாதிக விமுக்தி பெரமுனைத் தலைவர் திரு. கே. எம். பி. ராஜரத்ன பேசுகையில் கூறினர்.

அவர் தொடர்ந்து பேசுகையில், பொதுச் சேவைக் கமிஷனில் ஒரு அங்கத்தவராகவிருந்த திரு. நிஸங்கா விஜயரத்ன சில எதிர்ப்பு சக்திகளின் நடவடிக்கைகள் காரணமாக அவர் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார் என்றும் திரு. விஜயரத்ன பொதுச் சேவைக் கமிஷனில் அங்கத்தவராகவிருந்த சமயம் பௌத்த கோவில்களுக்கும் தேவாலயங்களுக்கும் வரி அறவிடக்கூடாது என்று ஒரு முறை பார்லிமெண்ரி கமிட்டியிடம் தெரிவித்திருந்தார் என்றும் கூறினர்.

பொதுமக்களின் பிரச்னைகளைத் தீர்த்து வைக்க வேண்டிய பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா தனது இனத்தவர்களின் வேலையில்லாத் திண்டாட்டத்தைத் தீர்த்து வைக்கின்றார். மந்திரிகளிடம் மலிந்திருக்கும் ஊழல்களையும் லஞ்சத்தையும் உண்மையாக உணர வைப்பவருக்கு இங்கு இடமில்லை. அரசாங்கத்தின் நடவடிக்கைகளை உண்மையுடன் கண்டித்த திரு. அசோக கருணாரத்ன அரசாங்கத்திலிருந்தே விலக்கப்பட்டிருக்கிறார்" என்றும் திரு. ராஜரத்ன கூறினர்.

### தமிழரசுக் கூட்டத்தில் மஜீத்

அக்கரைப்பற்று, வெள்ளி

நிந்தாவூர் எம். பி.யும், தடுப்புக்காவலின்போது தமிழரசுக் கட்சியிலிருந்து விலகியவருமான ஜனப். எம். ஐ. எம். அப்துல் மஜீத் அக்கரைப்பற்றில் ஆரம்பமான எல்லாம் தமிழ் இயக்கத்தில் தமிழரசுக் கட்சி எம். பி.க்களுடன் கலந்து கொண்டார்.

தமிழில் எழுதப்பட்ட ஒரு தந்தியை திரு. எஸ். ஜே. வி செல்வநாயகம் அக்கரைப்பற்று தபாற்கந்தோரிலிருந்து அனுப்பினர். ஏராளமான முஸ்லிம் மக்கள் சமுகமளித்திருந்தார்கள்.

அன்று நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் நிந்தாவூர் எம். பி. திரு. மஜீத் பேசியபோது கூறியதாவது: மொழிப்பிரச்னையில் நான் இன்னும் தமிழரசுக் கட்சியை ஆதரித்து வருகிறேன். மொழியுரிமை கிடைக்கும்வரை நான் தொடர்ந்து பாடுபடத் தீர்மானித்திருக்கிறேன்.

திரு. வி. ஏ. கந்தையா, திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம், செனட்டர் மாணிக்கம், திரு. வி. தருமலிங்கம், திரு. எஸ். எம். இராசமாணிக்கம் ஆகியோரும் பேசினர்கள்.

# 'அரசாங்கம் விரைவில் வீழ்ச்சியுறும் மக்களின் கஷ்டங்கள் தீர்க்கப்படவில்லை'

## பார்லிமெண்டில்திரு. கருணரத்ன அறிக்கை

கொழும்பு, வெள்ளி

"நாட்டு மக்கள் அளவிட முடியாத கஷ்டத்துக்குள்ளாகியிருக்கும் பொழுது சில பிரமுகர்கள் நுவரேலியாவில் ஓய்வெடுத்துக்கொண்டிருக்கிறார்கள். பாலும் தேனும் நாட்டில் வழிந்தோடுவதாக மந்திரிகளில் சிலர் பெருமையாகக் கூறிக்கொள்கிறார்கள். ஆனால் அவர்களின் சொந்த வாழ்வில்தான் இவ்விதம் நடக்கிறது, மக்களின் வாழ்விலல்ல" என ரம்புக்கணை எம். பி. திரு. அசோகா கருணாரத்ன நேற்று ஜனப்பிரதிநிதிகள் சபையில் எடுத்துரைத்தார்.

சென்ற வாரம் உதவி மந்திரிப் பதவியிலிருந்து விலக்கப்பட்ட திரு. கருணாரத்ன எதிர்க்கட்சியினரின் பகுதிக்குச் சென்றதன் பின்னர் பேசுகையிலேயே மேற்கண்டவாறு கூறினர்.

திரு. கருணாரத்ன மேலும் பேசியதாவது:-

**எந்தப் பிரச்னையும் தீர்க்கப்படவில்லை**

அரசாங்கம் ஒரு சிறிய பிரச்னையைத்தானும் தீர்க்கவில்லை. பிரதமரைச் சிலர் தவறான வழியில் நடத்திச் செல்கின்றனர்.

பல அரசாங்க எம்.பி.க்களின் உரிமை குறைக்கப்பட்டுள்ளது என்பது எனக்குத் தெரியும்.

ரோம் நகரம் தீப்பற்றி எரியும்பொழுது நீரோ மன்னன் வீணை வாசித்ததுபோல்தான் இப்பொழுது நிலைமை இருக்கிறது. மக்கள் தாங்கமுடியாத சுமைகளைச் சுமக்குமாறு நிர்ப்பந்தப்படுத்தப்பட்டிருக்கும்போது நுவரேலியாவில் உல்லாசமாக ஓய்வெடுத்துக்கொண்டிருக்கிறார்கள் சில பிரமுகர்கள்.

**'எத்தனை மந்திரிகள் தியாகம் செய்துள்ளனர்'**

அரசாங்க முக்கியஸ்தர்கள், தியாகம் செய்யுமாறு மக்களை மீண்டும் மீண்டும் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் தமது போக்குவரத்து அலவன்சுகளைத்தானும் எத்தனை மந்திரிகளும், உதவி மந்திரிகளும் தியாகம் செய்திருக்கிறார்கள்? ஒரு மந்திரிக்கு ரூ. 6,000 பெறுமதியான பியானோவும், ரூ. 24,000 பெறுமதியான மின்சார சாதனங்களும் வழங்கப்பட்டுள்ளன.

இன்னொரு மந்திரி சுவிற்சர்லாந்திலுள்ள ஒரு வங்கியில் புதிதாகக் கணக்கு ஆரம்பித்துள்ளார்."

இந்த மந்திரியின் பெயரைத் தெரிவிக்குமாறு அரசாங்க எம். பி.கள் திரு. கருணாரத்னவைக் கேட்டபொழுது அவர் தாம் அந்தப் பெயரைப் பிரத்தியேகமாகக் கூறுவதாகத் தெரிவித்தார்.

திரு. கருணாரத்ன தொடர்ந்து கூறியதாவது:-

**அரசாங்கம் ஆட்டம் கண்டுவிட்டது!**

அரசாங்கம் இப்பொழுது புயலில் அகப்பட்ட வாழை மரம் போன்று இருக்கிறது. இருட்டில் வழி தெரியாது தத்தளிக்கும் மனிதனைப்போல் இருக்கிறது. எந்த ஒரு பாதையையும் குறிப்பிட்டுச் செல்லாது காற்றடித்த பக்கத்துக்கு ஆடிக்கொண்டிருக்கிறது.

பிரதமராகும் நோக்கத்துடன் உடறட்ட பெரமுனையை ஆரம்பிக்க குறிப்பிட்ட ஒருவர் முயற்சிசெய்து கொண்டிருக்கிறார். இவர் 25 எம் பிக்களை தனது நோக்கத்துக்கு சாதகமாகப் பயன்படுத்துவதற்காக அவர்களின் ஆதரவைத் தேடியுள்ளார். இந்த வித நோக்கத்துக்கு ஆதரவு கொடுக்காததாலேயே நான் ஒதுக்கப்பட்டேன்.

**பௌத்த மதத்துக்கு உரிய இடம்**

பௌத்த சமயத்துக்கு அதற்குரிய இடம் அளிக்கப்படுமென எந்த ஒரு மந்திரியும் உறுதியளிக்கவில்லை. இதற்காக நான் செயல்புரிந்து வருகையில் மற்ற மதங்களும் பாதுகாக்கப்பட வேண்டுமென்பதை நான் எடுத்துக் கூறியுள்ளேன்.

ஆங்கில ஆசிரியரைவிட குறைவாகவே சிங்கள ஆசிரியருக்கு சம்பளம் வழங்கப்படுகிறது.

**திறமையுள்ளவருக்கு இடமில்லை**

சுதந்திரக்கட்சி இருளில் சிக்கியுள்ளது. திறமைவாய்ந்தவர்கள் ஒதுக்கப்பட்டுள்ளனர்.

பிரதமருக்குள்ள ஒரே ஒரு தகுதி அவர் காலம் சென்ற பிரதமரின் மனைவி என்பதே.

சுதந்திரக் கட்சி உருவாகுவதற்கு நான் உதவி செய்துள்ளேன் எனது பணத்தையும் நேரத்தையும் செலவிட்டு இதை வளர்க்க நான் உழைத்துள்ளேன். காலம் சென்ற திரு எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்காவில் நான்கொண்டிருந்த விசுவாசத்தினலேயே நான் இவ்விதம் உழைத்தேன்.

சுதந்திரக்கட்சி ஆட்சிபீடத்தில் அமர்ந்த பின் என்னை ஒதுக்குவதற்கு சிலர் திட்டமிட்டு முயற்சிசெய்து வந்துள்ளனர். இதைக் கருத்தில் கொண்டு எனது தொகுதியின் தேவைகள் கவனிக்கப்படாதிருந்தது.

காலம் சென்ற பிரதமரின் கொள்கைகளை அரசாங்கம் அமுல் நடத்தாதது குறித்து நான் மனம் வருந்துகிறேன்.

போக்குவரத்து மராமத்து மந்திரி தமதுவாசஸ்தலத்துக்கு செல்லும் வீதியை அரசாங்க செலவில் அமைத்தாரென்பதை அவரால் மறுக்கமுடியுமா? என நான் சவால் விடுகிறேன் இத... காக ஏழை மக்களின் நிலை... எடுக்கப்பட்டது.

### எதிர்பாராதது

நுவரேலியா, வெள்ளி

கந்தபொலாவைச் சேர்ந்த பெனர்ட் என்பவர் தனது கைத்துப்பாக்கியால் தற்செயலாக தமது நெஞ்சில் சுட்டு அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினர்.

தனது கைத்துப்பாக்கிப் பயிற்சியை முடித்துவிட்டு, சிறிது நேரத்தின் பின்பு, குண்டுகள் போடப்பட்ட துப்பாக்கியுடன் முகம் அலம்பச் சென்றபோது இந்த எதிர்பாராத சம்பவம் நிகழ்ந்தது.

முகம் அலம்பும் போது வழுக்கி கீழே விழும் சமயம், தனது கைத்துப்பாக்கியை பழுதடையாமல் பாதுகாக்கும் பொருட்டு நெஞ்சுடன் அணைத்த போதே வெடிதீர்ந்தது. பெர்னட் உடனயாக நுவரேலியா ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

### சாப்ரிக்கு சிறிமா கடிதம்

கெய்ரோ, ஏப். 26

சீனவுக்கு விஜயம் செய்து இந்திய-சீன எல்லைப் பிரச்னை சம்பந்தமாக சீனப் பிரதமர் சூ-என்-லாயுடன் பேச்சுவார்த்தை நடத்திவிட்டு இன்று இந்தியா வந்து சேர்ந்த ஐக்கி அரபுக்குடியரசுப் பிரதமர் விங்கமாண்டர் அலி சாப்ரிக்கு இலங்கைப் பிரதமர் திருமதி சிறிமா பண்டாரநாயக்கா ஒரு கடிதம் அனுப்பியிருப்பதாக கெய்ரோ செய்தியொன்று கூறுகிறது.

### தமிழ் எழுத்தாளர் மன்ற தீர்மானங்கள்

கொழும்பு, வெள்ளி

தமிழ் எழுத்தாளர் மன்றத்தின் செயற்குழுக் கூட்டம் கொழும்பு தமிழ்ச் சங்கப்பணிமனையில் மன்றத் தலைவர் கா. பொ. இரத்தினம் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் பின்வரும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன:

இலங்கையிலுள்ள பல்வேறு கருத்துள்ள எழுத்தாளர்களையும் அழைத்து "தமிழ் மொழியின் வாழ்வில் எழுத்தாளர் பங்கு" என்னும் விஷயம்பற்றி ஒரு கருத்தரங்கத்தை, 19-5-63 ஞாயிற்றுக்கிழமை கொழும்பு விவேகானந்தசபை மண்டபத்தில் நடத்துதல்.

மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், மலைநாட்டு தமிழ் எழுத்தாளர் மன்றங்களுடன் ஒரு கூட்டணி ஏற்படுத்த முயற்சி எடுத்தல். சமீபத்தில் பரிசு பெற்ற சிறுகதைகளை ஒன்று சேர்த்து ஒரு தொகுப்பு நூல் வெளியிடுதல். (அதுபற்றி மேற்கொண்டு நடவடிக்கையெடுக்க ஒரு தனிக்குழு அமைக்கப்பட்டது.)

அண்மையில் தமிழ் எழுத்தாளர் மன்றம் விடுத்த வேண்டுகோள்படி தமிழ் பேசும் மக்கள் சகல அலுவல்களையும் தமிழில் மட்டுமே செய்துவருவதைப் பாராட்டுகிறது. தற்போது வருமானவரிப் பத்திரங்களும், காசுக் கட்டளைகளும் தமிழில் கிடைப்பதால் தொடர்ந்து சகல அலுவல்களையும் தமிழ்க்கத்தில் தொடரும்படி தமிழ் பேசும் மக்களை இம்மன்றம் கேட்டுக்கொள்கிறது. இப்போது வருமானவரி இலாகாவிலிருந்து ஆங்கிலப் பத்திரங்கள் கிடைப்பதால், வருமானவரி செலுத்தும் ஒவ்வொருவரும் தமிழிலேயேவருமானவரிப் பத்திரத்தை நிரப்பி அனுப்புமாறு தனித்தனி வேண்டுகோள் அனுப்புவதென்று தீர்மானிக்கப்பட்டது.

### ஐயாறன்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

யைக் கலைத்துவிட கொழும்பிலே சில வட்டாரங்கள் முயற்சி செய்வதாக சில வதந்திகள் காதில் விழுந்தன. ஆனால் சபையைக் கலைக்காமலே நிலைமையை வெற்றிகரமாகச் சமாளிக்கப்பட்டுவிடலாமென்றும் சொல்லப்படுகிறது.

* * *

மாதா பிதாவாகி மக்களாகி மறிகடலும் மால்விசும்பு தானேயாகி, கோதாவரியாய்க் குமரியாகிக் கொல்புலி தோலாடைக்குழகனகி போதாத மலர் கொண்டு போற்றிநின்று புனைவார் பிறப்பறுக்கும் புனிதனுகி, யாதானுமென நினைந்தார்க்கெளிதேயாகி அழல் வண்ண வண்ணர்தாம் நின்றவாறே.

— திருநாவுக்கரசர்

கொழும்பில்

# வெசாக் கொண்டாட்டம் சிறப்பாக அமையாது

## எதிர்பார்த்த நிதி வசூலிக்கப்படவில்லையாம்

கொழும்பு, வெள்ளி

கொழும்பில் இந்த முறை வெசாக் கொண்டாட்டம் சென்ற வருடங்களைப்போல் சிறப்பாக இடம்பெருது எனத் தெரிகிறது.

கொழும்பு வீதிகளை அலங்கரிக்கும் பந்தல்கள் வழக்கம்போல் அதிகமாயிராதென்றும் குறிப்பிட்ட சில பந்தல்களே அமைக்கப்படும் எனவும் அறியப்படுகிறது

இவ்வித கொண்டாட்டதின அலங்கரிப்புக்காக நிதி சேகரிக்கும் பல இயக்கங்கள் தாம் இதுவரை சேகரித்துள்ள பணம் எதிர்பார்த்ததைவிட மிகக் குறைவாகவே இருப்பதாகத் தெரிவித்துள்ளன.

### பொருள்களின் விலை உயர்வும் காரணம்

பந்தல்கள் கட்டுவதற்குத் தேவையான பொருள்களின் விலை அதிகரித்துள்ளதால் பெரிய பந்தல்களை அமைப்பது இம்முறை சாத்தியப்படாது என தெரிவிக்கப்பட்டுள்ளது. மின்சார சாதனங்களும் விலை உயர்வடைந்துள்ளதால் நவீன அலங்கரிப்புகளும் சென்ற வருடங்கள் போல் இடம்பெருது எனத் தெரிகிறது.

### அதிக தானசாலைகள்

கொழும்பு முழுவதும் இந்த முறை அதிக 'தானசாலைகள்' அமைக்க கொண்டாட்ட ஏற்பாடுகளைச் செய்யும் இயக்கத்தினர் ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளனர்.

### மின்சார விநியோகம் மேலதிகமாக இல்லை

கோட்டே பகுதியில் வெசாக் தினத்தில் மேலதிக மின்சாரம் சப்ளை செய்யமுடியாது என கோட்டே நகரசபைத் தலைவர் அப்பகுதி வரியிறுப்பாளருக்கு அறிவித்துள்ளார்.

மின்சாரம் சப்ளை செய்யும் சாதனங்களுக்கு மேலதிக மின்சாரம் சப்ளை செய்ய சக்தியில்லாதிருப்பதாலேயே மேலதிக மின்சாரம் சப்ளை செய்யமுடியாதநிலையிலிருப்பதாகக் காரணம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட அளவுக்கு மேலதிகமாக மின்சாரம் உபயோகப்படுத்துபவர்களுக்கு மின்சார விநியோகம் துண்டிக்கப்படுமெனவும் எச்சரிக்கைசெய்யப்பட்டுள்ளது.

---

## குப்தர் காலத்து சின்னம் கண்டுபிடிப்பு

லக்னௌ, ஏப்ரல் 26

உத்தர பிரதேச ராஜ்யத்தில் காஜிபூர் ஜில்லாவிலுள்ள சையத்பூர் பிதாரி கிராமத்தில் குப்தர் காலத்துச் சின்னம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இது 5-ம் நூற்றுண்டைச் சேர்ந்ததாகும்.

அக்காலத்தில் கட்டப்பட்ட ஒரு கட்டடத்தின் வாசற்கால் ஒன்று இங்கு கண்டுபிடிக்கப்பட்டது. இதன் ஒருபுறத்தில் லக்ஷ்மியின் மீது யானைகள் தங்களது துதிக்கையால் நீரை அபிஷேகம் செய்வதுபோலச் செதுக்கப்பட்டுள்ளது. மற்ருருபுறத்தில் துர்க்கை சிங்கத்தின்மீது வீற்றிருப்பதுபோலச் செதுக்கப்பட்டுள்ளது. இந்தப் புராதனச் சின்னம் சிறந்த வேலைப்பாடுகளைக் கொண்டதாக உள்ளது என்று ராஜ்ய அரசாங்க நிபுணர்கள் கூறினர்.

---

## சேதமான உருளைக்கிழங்கு

### நஷ்ட ஈடு கோரப்பட்டுள்ளது

கொழும்பு, வெள்ளி

பம்பாயிலிருந்து இங்கு உருளைக்கிழங்கு இறக்குமதி செய்யப்பட்டபோது பழுதாகிய உருளைக்கிழங்குக்கு நஷ்ட ஈடு தருமாறு கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனம் இன்ஷூரன்ஸைக் கோரியுள்ளது.

ஆஸ்டர்ட்ரம் கப்பலில் பம்பாயிலிருந்து இங்கு இறக்குமதி செய்யப்பட்ட 144 தொன் உருளைக்கிழங்கில் சிறிதளவு பகுதி பழுதாகியதைத்தொடர்ந்தே கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனம் இன்ஷூரன்ஸிடம் நஷ்ட ஈடு கோரியுள்ளது.

---

## ஆஸ்பத்திரி சுவீப் வரி

கொழும்பு, வெள்ளி

ஆஸ்பத்திரி சுவீப்பில் வெற்றி பெறுபவர்களுக்குக் கொடுக்கப்படும் பரிசுகள்மீது விதிக்கப்பட்டுள்ள வரிகளை நீக்க, சட்டம் இயற்றப்படுவதாக சுகாதார அமைச்சின் பார்லிமெண்டரிக் காரியதரிசி தெரிவித்துள்ளார்.

பரிசுகள் மீதுள்ள வரிகள் நீக்கப்பட்டதும் பரிசுத்தொகைகள் குறையும் என்றும் இருந்தபோதிலும் சலுகைப் பரிசுகள் 25 லிருந்து 50 ஆக அதிகரிக்குமெனறும் அவர் தெரிவித்துள்ளார்.

---

## அலிசாப்ரி-நேரு சந்திப்பு

புதுடில்லி, ஏப்ரல் 26

இன்று புதுடில்லி வந்து சேர்ந்த ஐக்கிய அரபுக் குடியரசுப் பிரதமர் விங்கமாண்டர் அலிசாப்ரி நாளை சனிக்கிழமை பாரதப் பிரதமர் நேருவுடன் பேச்சுக்கள் நடத்துவார்.

பாரத-சீன எல்லைத்தகராறு குறித்து சீனப் பிரதமர் திரு. சூ-என்-லாயுடன் பேச்சுக்கள் நடத்திவிட்டு திரு. அலிசாப்ரி இன்று புதுடில்லி திரும்பினர்.

நாளை சனிக்கிழமை திரு. அலிசாப்ரி பிரதமர் நேருவுடன் மதிய உணவு உண்பார். நாளை இரவு அவர் உபராஷ்டிரபதி ஸாகீர் ஹுசைனுடன் விருந்துண்பார். பிரதமர் அலிசாப்ரி இந்திய ஜனாதிபதி டாக்டர் ராதாகிருஷ்ணனையும் சந்திப்பார்.

சீனப் பிரதமர் சூ-என்-லாயுடன் பிரதமர் அலிசாப்ரி பேச்சுக்கள் நடத்தியபின்னர் பீக்கிங்கில் வெளியானதொரு அறிக்கையில் பாரத-சீன எல்லைத் தகராறைத் தீர்த்து வைப்பதில் கொழும்பில் கூடிய ஆறு நாடுகள் எடுத்துக்கொண்ட முயற்சியை சீனப் பிரதமர் பாராட்டுவதாகத்தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆசிய-ஆபிரிக்க விஜயம் குறித்தும் சீன-ஐக்கிய அரபுக் குடியரசு ஒற்றுமை குறித்தும் இரண்டு நாட்டுப்பிரதமர்களும் பேச்சுக்கள் நடத்தியதாகவும் அறிக்கை கூறுகிறது.

சீன கம்யூனிஸ்ட் கட்சித்தலைவர் மா-ஸே-துங்கை திரு. அலிசாப்ரி நேற்று சந்தித்து பேச்சுக்கள் நடத்தினர்.

---

## விமான திட்ட வேலைகள்

கொழும்பு, வியாழன்

கட்டுநாயக்கா விமானநிலைய நிர்மாண வேலைகளுக்காக இலங்கை அரசாங்கம் உலகம் பூராவும் புதிய டெண்டர்களைக் கோரியுள்ளது. ஒப்பந்தக்காரர்களின் விண்ணப்பங்கள் மே மாசம் 5-ம் திகதிவரை ஏற்றுக்கொள்ளப்படும் எனச் சம்பந்தப்பட்ட அதிகாரிபொருவர் தெரிவித்துள்ளார்.

---

## ஜனாதிபதி கெனடி ஐரோப்பிய விஜயம்

வாஷிங்டன், ஏப்ரல் 26

ஜனாதிபதி கென்னடி ஜூன் மாத இறுதி இரண்டு வார காலத்தில் இத்தாலி, ஜெர்மன் சமஷ்டிக் குடியரசு, ஐயலாந்து முதலான நாடுகளுக்கு விஜயம் செய்வார்.

சுற்றுப் பிரயாணம் சில சமயங்களில் ஏழு, எட்டு நாட்களுக்கு நீடிக்குமென ஜனாதிபதியின் பத்திரிகைக் காரியதரிசி திரு. பியரிஸலிங்கர் தெரிவித்தார். எனினும் சுற்றுப் பிரயாண விபரங்கள் அனைத்தும், பிரஸ்தாப விஜயத்துக்கான ஒழுங்குகளை செய்ய முன்செல்லும் கோஷ்டியினர் திரும்பி வரும்வரை திட்டவட்டமாகத் தெரிவிக்க முடியாதென அவர் மேலும் தெரிவித்தார். ஒழுங்குகளைச் செய்யும் குழுவினர் மே மாதம் 5-ம் திகதி ஐரோப்பா புறப்படுகின்றனர்.

திருமதி கென்னடி கர்ப்பிணியாக இருப்பதால் ஜனாதிபதியுடன் ஐரோப்பிய விஜயத்தில் கலந்துகொள்ள மாட்டாரென வெள்ளை மாளிகை ஏற்கனவே அறிவித்துள்ளது. எனினும் 1964-ல் ஜனாதிபதி தம்பதிகள் இத்தாலிக்கு ராஜாங்க விஜயம் செய்ய தற்காலிகமான ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

---

## கொடுமையான ஜேர்மன் சின்னம்மை

லண்டன், ஏப்ரல் 26

ஜெர்மன் சின்னம்மை மற்ற சாதாரணச் சின்னம்மையை விடப் பயங்கரமானது. இதன் பெயர் ருபெல்லா கர்ப்பிணியாக இருக்கும் போது ஆரம்ப மாதங்களில் தாய்க்கு இந்த நோய் தொற்றுமானல், கருவிலுள்ள சிசுவையே உருக்குலைத்துவிடும். இதைத்தடுக்க எந்த மருந்தும் இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை. ஆனல், இந்தக் கொடிய நோயை உண்டாக்கும் நச்சு வைரஸை வாஷிங்டனிலுள்ள வால்டர்ரீட் மருத்துவமனையிலுள்ள டாக்டர்கள் பிரித்துத்தனிப்படுத்தி அறிந்துகொண்டுள்ளனர். இந்த வைரஸ்களிலிருந்து, இந்த ஆபத்தான நோய்த் தடுப்புக்கான அம்மைப் பாலைத் தயாரிப்பதற்காக அவற்றை ஆய்வுச்சாலையில் வளர்த்துவருகிருர்கள்.

ஆஸ்திரேலிய மருத்துவ ஆராய்ச்சியாளர்களும் இந்த ருபெல்லா வைரஸைத் தனிப்படுத்துவதில் வெற்றி கண்டுள்ளார். வாஷிங்டன் ஆராய்ச்சியை இது உறுதிப்படுத்துவதாக இருக்கிறது.

---

## கென்னடி-மலாயா துணை பிரதமர் சந்திப்பு

வாஷிங்டன், ஏப். 25

மலேசியா சம்மேளனத்துக்கு ஆதரவு அளித்ததற்காக மலாயா துணைப் பிரதமர் நேற்று அமெரிக்க ஜனாதிபதி கெனடியைச் சந்தித்து நன்றி செலுத்தினர். மலாயா துணைப் பிரதமர் ஜனாதிபதி கெனடியை வெள்ளை மாளிகையில் சந்தித்து 5 நிமிட நேரம் பேச்சுக்கள் நடத்தினர்.

---

## போப்பாண்டவரின் சமாதானப் பரிசு

வத்திக்கான்நகர், ஏப். 25

கடந்த மாதத்தில் போப்பாண்டவருக்கு பால்சான் சமாதானப்பரிசாக ரூ. 8 லட்சம் வழங்கப்பட்டது. இந்தப் பணத்தை வைத்துக்கொண்டு இரண்டு அல்லது மூன்ருண்டுகளுக்கு ஒருமுறை வழங்குவதற்கான சமாதானப் பரிசை ஏற்படுத்த போப்பாண்டவர் முடிவுசெய்துள்ளார்.

---

## ரேடியோ இசைகேட்டு அதிக முட்டையிடும் கோழிகள்

சிட்னி, ஏப்ரல் 21

ஆஸ்திரேலியாவில் கோழிப்பண்ணைகளில் முட்டையிடும் கோழிகள் அதிக அளவில் செத்துவந்தன. இதைத்தடுத்து கோழிகள் முட்டையிடுவதை அதிகரிக்க புதுமுறை கையாளப்படுகிறது.

கோழிப் பண்ணைகளில் அதிக பிரகாசமில்லாத விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளன. அத்தோடு கோழிகளுக்கு இரவுமுழுதும் "இசைவிருந்து" அளிக்கப்படுகிறது கோழிபண்ணை நடத்துபவர்கள் இதற்காக இப்பண்ணைகளில் ரேடியோப் பெட்டிகளை அமைத்துள்ளனர்.

இதுவரை கோழிப்பண்ணைகளில் உள்ள கோழிகள் இரவில் திடீரென ஏதாவது சத்தத்தைக் கேட்டால் உறக்கத்திலிருந்து அடிக்கடி விழித்துக்கொண்டு வந்தன. ஆனல் அதிக பிரகாசமில்லாத விளக்குகளை அமைத்துள்ளதாலும், ரேடியோ "இசைவிருந்தின்" மூலமாக ஒரே சீரான ஓசை இருந்துவருதலாலும் கோழிகள் நன்கு உறங்குகின்றன. அத்தோடு அவை நன்கு தீனி உண்கின்றன. அதிக முட்டைகளையும் இடுகின்றன என்று கோழிப்பண்ணைச் சொந்தக்காரர்கள் கூறுகின்றனர்.

---

இடதுசாரிகளின்

# மே தினக் கூட்டம்

## பிரமாண்டமானமுறையில்ஏற்பாடு

## 6 தொழிற்சங்கங்கள் கலந்து கொள்ளும்

கொழும்பு, வெள்ளி

**கொழும்பில் இந்த வருடம் இடதுசாரிகளின் மேதினவிழா பிரமாண்டமான முறையில்நடைபெற ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. இடதுசாரிக் கட்சிகளுடன் இணைந்துள்ள முக்கிய தொழிற்சங்கங்களெல்லாம் மூன்று இடதுசாரிக் கட்சிகள் ஒன்ருகச்சேர்ந்து நடத்தும் இந்த மேதினக் கூட்டத்தில் பங்கு கொள்ளவிருக்கின்றன.**

இடதுசாரிகள் இணைந்து நடத்தும் இந்தக் கூட்டம் மாலை நான்கு மணிக்கு கால்பேஸ் மைதானத்தில் நடைபெறவிருக்கிறது. ஊர்வலங்கள் நண்பகளிலிருந்து ஆரம்பமாகும். சமசமாஜக்கட்சியும் மகாஜன எக்சத் பெரமுனையும் பொரளை கல்பெல் பூங்காவிலிருந்து தமது ஊர்வலங்களை ஒன்ருக நடத்தும். கம்யூனிஸ்ட் கட்சியினர் தமது ஊர்வலத்தை கொம்பனித்தெருவிலுள்ள ஹைட்பார்க்கிலிருந்து ஆரம்பிப்பார்கள். சகல ஊர்வலங்களும் பொரளைச் சந்தியில் ஒன்ருகக் கூடி கால்பேஸ் மைதானத்தை அடையும்.

தொழிற்சங்க இயக்கங்கள் தாமாகத் தனித்து மேதினக் கொண்டாட்டத்தை நடத்த மாட்டாதென அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த வருடம் இடதுசாரிக்கட்சியினருடன் இணைந்து மேதினவிழாவை நடத்த எண்ணியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### 6 தொழிற்சங்கங்கள் கலந்துகொள்ளும்

6 தொழிற்சங்க இயக்கங்கள் இடதுசாரிக்கட்சிகள் இணைந்து நடத்தும் மேதினக் கொண்டாட்டத்தில் கலந்துகொள்ள முடிவு செய்துள்ளன.

இலங்கை தொழிற்சங்க சம்மேளனம், இலங்கை தொழிற்சங்கங்களின் மத்திய கவுன்ஸில், இலங்கை தொழிலாளர் சம்மேளனம், அரசாங்க சேவைகள் சங்கம், ஸ்ரீ லங்கா ஜாதிக ஊழியர் தொழிற் சங்க சம்மேளனம், அரசாங்க சேவை குரு சங்கம் ஆகியவையே கலந்துகொள்ளவிருக்கும் சங்கங்கள்.

இந்த 6 சங்கங்களும் இணைந்து வெளியிட்டுள்ள ஒரு கூட்டு அறிக்கையில் தொழிலாளர்களின் பலத்தைக் காட்ட இது உதவுவதாக இருக்கட்டுமெனத் தெரிவித்துள்ளன.

### 16 தலைவர்கள் வெளியூர் பயணம்

16 தொழிற்சங்கத் தலைவர்கள் வெளிநாடுகளில் நடைபெறும் மேதின விழாவில் கலந்துகொள்ள விருக்கின்ருர்கள்.

ரஷ்யா, சீன, கியூபா, கிழக்கு ஜேர்மனி ஆகிய நாடுகளில் நடைபெறும் மேதினவிழாவில் இவர்கள் கலந்துகொள்வார்கள்.

புலத்சிங்கள எம். பி. திரு. எட்மண்ட்சமரக்கொடியும் இந்த முறை மேதின விழாவுக்கு வெளிநாட்டில் இருப்பார். இவர் மாஸ்கோவுக்குச் செல்லவிருக்கிருர்.

---

## சமாதான தொண்டர்களுக்கு சீன தடை

பீகிங், ஏப். 25

இந்தியாவிலிருந்து சீனவுக்கு பாத யாத்திரை மூலம் செல்லும் சமாதானத் தொண்டர்களை சீனவுக்குள் அனுமதிப்பதில்லை என பீகிங் அரசாங்கம் தீர்மானித்திருக்கிறது. பாகிஸ்தான் வழியாகச் செல்ல தொண்டர்கள் அனுமதிக்கப்பட்டால் அது நேசமற்ற செயல் என்றும் கருதப்படும் என பாகிஸ்தான் அரசாங்கத்துக்குச் சீன அறிவித்திருபதாயும் திரு. சாஸ்திரி லோக சபையில் கூறினர்.

---

## 'திங்கட்கிழமை முழு அளவில் சீனி'

கொழும்பு, வெள்ளி

சில தினங்களில் இரு கப்பல்களிலிருந்து சீனி இறக்குமதி செய்யப்பட்டபின், மொத்த வியாபாரிகள் முழு அளவில் சீனி பெறுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறதென்று உணவுப்பகுதி தெரிவித்துள்ளது.

இந்தியாவிலிருந்து 'சகார் லட்சுமி' என்னும் கப்பல் 3,000 தொன் சீனியும், பர்மாவிலிருந்து 'யூனியன் பைலர்' என்னும் கப்பல் 3000 தொன் சீனியும் இறக்குமதி செய்யும்.

# வானொலி நிகழ்ச்சிகள்

## கொழும்பு

### சனி 27-4-63

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவ நற்சிந்தனை, 6-55 கத்தோலிக்க நற்சிந்தனை. 7-15 தேர்ந்த இசை, 7-45 திரை இசை, 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை

மாலை 5-00 பிறந்த தின வாழ்த்துக்கள், 5-15 இளைஞர் மன்றம், 5-45 திரை இசை, 6-15 கிராம சஞ்சிகை, 6-45 மகேஸ்வரி நகுலேஸ்வரன்-வயலின்.

இரவு 7-15 கண்டதும் கேட்டதும், 7-30 நேயர் விருப்பம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 ஞானேஸ்வரி சோமசுந்தரம்-பேச்சு, 9-50 வ. நடராஜா-பாட்டு.

### ஞாயிறு 28-4-63

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-45 பாமாலை, 6-55 கத்தோலிக்க நற்சிந்தனை, 7-15 தேர்ந்த இசை, 8-15 தமிழ மூலம் சிங்களம், 8-30 ஞானாஞ்சலி, 9-00 முஸ்லிம் சமயப் பாடசாலை, 9-30 கத்தோலிக்க நிகழ்ச்சி, 11-30 சிறுவர் மலர்.

பகல் 12-15 நேயர் விருப்பம், 1-00 மாதர் நிகழ்ச்சி.

மாலை 5-00 பிறந்த தின வாழ்த்துக்கள், 5-15 பாட்டு, 5-45 திரைக் குரல், 6-15 கோவில் அஞ்சல்.

இரவு 7-15 மாதர் கேட்டவை, 7-30 பி. வி. கோபால கிருஷ்ணன்-பாட்டு, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 'எதிர்பார்க்கவில்லை' - நாடகம், 9-45 நிலைய ஒலிப்பதிவுகள்.

## திருச்சி

### சனி 27-4-63

(செய்திகள்: காலை 7-15, பகல் 2-00, இரவு 7-15)

காலை 6-45 மங்கள இசை, 6-50 துதிப்பாடல்கள், 7-00 அருள் வாக்கு, 7-05 வாத்திய இசை, 7-10 நிகழ்ச்சிக் குறிப்புகள், 7-30 செய்திக் குறிப்புகள், 7-35 எஸ். கணபதியாபிள்ளை-வயலின்.

பகல் 1-00 துதிப்பாடல்கள், 1-20 பிள்ளைக்கனியமுது, 1-50 குரல் இசை, 2-10 எல். கணபதியாபிள்ளை-வயலின்.

மாலை 4-45 விவித பாரதி (கர்நாடக சங்கீதம்), 5-45 வாத்திய இசை, 6-20 கிராம நிகழ்ச்சிகள்.

இரவு 7-30 'இரு பெண்கள்'-நாடகம், 8-15 திரைப்பட இசை, 8-40 தேசபக்திப் பாடல்கள், 9-30 அகில பாரத சங்கீத நிகழ்ச்சி.

### ஞாயிறு 28-4-63

(செய்திகள்: காலை 7-15, பகல் 2-00, இரவு 7-15)

காலை 6-45 மங்கள இசை, 6-50 துதிபபாடல்கள், 7-00 அருள்வாக்கு, 7-05 வாத்திய இசை, 7-10 நிகழ்ச்சிக் குறிப்புகள், 7-30 செய்திக் குறிப்புகள், 7-35 இசைக்கோவை, 8-15 எம். கல்பகம்-பாட்டு.

பகல் 12-00 நீங்கள் கேட்டவை, 12-30 சூரியகாந்தி: கதம்ப நிகழ்ச்சி, 1-00 மணிமலர், 1-50 வாத்திய இசை, 2-10 பெண்ணுலகம், 2-30 மெல்லிசை, 3-00 ஸ்ரீவைகுண்டம் எஸ். பரமசிவம்பிள்ளை-பாட்டு.

மாலை 4-45 விவிதபாரதி (கர்நாடக சங்கீதம்), 5-45 இசைப் பயிற்சி, 6-20 கிராம நிகழ்ச்சிகள்.

இரவு 7-30 கொட்டுமுரசே-சித்திரம், 7-45 கே. பாஷ்யம்-பாட்டு, 9-15 தேசபக்திப் பாடல்கள், 9-45 வாத்தியக் கோஷ்டி இசை.

# கைலாசநாத பிள்ளையாரின் சித்திரத் தேர்

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணம் ஸ்ரீ கைலாசநாதர் பிள்ளையார் கோவிலில் புதிதாக 50,000 ரூபா செலவில் சித்திரத் தேர் உருவாக்கப்பட்டுள்ளது. புதிய தேரின் வெள்ளோட்டவிழா இன்று மாலை நடைபெறவிருக்கிறது.

எட்டு மாதத்தில் இப்புதிய தேரின் வேலைகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. திருவிடைமருதூரைச் சேர்ந்த நான்கு சிறபிகள் இச்சித்திரத் தேரின் அமைப்பு வேலைகளைச் செய்துள்ளனர். தேர் நிறுத்துமிடமான தேர்முட்டி நிலையம் 30,000 ரூபா செலவில் அமைக்கப்பட்டுள்ளது. தேரில் சிறபங்கள் செதுக்கப்பட்டுள்ளன. தேரின் முதலாவது வரிசையில் கோவிலின் வரலாறு சிற்ப ரூபமாகச் செதுக்கப்பட்டுள்ளது. இவ்வாலயத்தை இடித்து அங்கிருந்த கற்களைப் போர்த்துக்கீசர் கோட்டை அமைப்பதற்கு உபயோகப்படுத்தியதாகச் சிற்பங்கள் தெரிவிக்கின்றன.

இந்த ஆலயத்தின் புனருத்தாரண முயற்சியிலீடிபட்ட ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர், ஆலயத்தின் தற்போதைய மனேஜர் திரு. இராமலிங்கத்தின் தந்தை பொன்னம்பலம் ஆகியோரின் உருவங்களும் தேரில் பொறிக்கப்பட்டுள்ளன. தேரில் பொருத்தப்பட்ட 108 மணிகளும் உரோமியத்தில் உருவாக்கப்பட்டுள்ளன.

தேர்த் திருப்பணிப் பஞ்சாயத்தில் இந்தியாவிலிருந்து முன்னள் ஹைகமிஷனர் திரு. வி. குமாரசாமி, வவனியா முன்னள் எம். பி. திரு வி சுந்தரலிங்கம் ஆகியோர்கள் தொண்டாற்றியுள்ளனர்.

இச்சித்திரத் தேரின் வெள்ளோட்டவிழா இன்று மாலை 3-15 5-15 மணிக்குமிடையே நடைபெறவிருக்கின்றது. விழாவை நல்லூர் தேவஸ்தான ஆதீனகர்த்தா திரு. சண்முகதாச மாப்பாண முதலியார் ஆரம்பித்துவைப்பார்.

இவ்வாலயத்தின் ரதோற்சவ விழா அடுத்த மாதம் 7-ந் திகதி நடைபெறவிருப்பதாகத் தெரிகிறது.

# இ. போ. ச. சாரதிக்கு தங்கப்பதக்கம்

கொழும்பு, வெள்ளி

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் மேதினவிழா பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா தலைமையில் சுதந்திர சதுக்கத்தில் நடைபெறும். அன்றைய தினத்தில் இடம் பெறும் ஊர்வலத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் தொழிற் சங்கங்கள் யாவும் கலந்து கொள்ளும்.

கடந்த வருடத்தில் நடைபெற்ற இலங்கை போக்குவரத்து சபை ஊழியர்களின் வேலை நிறுத்தத்தின்போது, துணிகரமாக கடமையாற்றிய இ. போ. ச. சாரதிஒருவருக்கு பிரதம மந்திரி தங்கப்பதக்கமொன்றை வழங்குவார்.

# கடற்தொழிலாளர் கோஷ்டி வெற்றி

யாழ்ப்பாணம், வெள்ளி

நாவாந்துறை சென். மேரிஸ் விளையாட்டுக் கழக ஆதரவில் கடற்தொழிலாளர் கோஷ்டிக்கும் தரைக் கோஷ்டிக்குமிடையே நடைபெற்ற சிநேக பூர்வமான உதைபந்தாட்டப்போட்டியில் கடற் தொழிலாளர் கோஷ்டியினர். 2-1 கோல்களால் வெற்றியீட்டினர். திரு. ம. ஆசிர்வாதம் மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

# போலியோ தடுப்பு இயக்கம்

பருத்தித்துறை, வெள்ளி

இளம்பிள்ளைவாத தடுப்பு மருந்துகளை 3 மாதம் முதல் 8 வயதுவரை உள்ள குழந்தைகளுக்குக் கொடுப்பதற்கான திட்ட அடிப்படையில் வடமராட்சிப் பகுதியிலும் விபரங்கள் சேகரிக்கும் வேலைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. பல்வேறு கல்லூரிகளின் சாரணர்கள் உட்பட தொண்டர்கள் பலர் இப்பணியைச் செய்யத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான பயிற்சிகளையும் போதனைகளையும் அளிக்குமுகமாக வடமராட்சிப்பகுதி சுகாதார வைத்திய அதிகாரி திரு. வே. ஜீவநாயகம் ஆலோசனைக் கூட்டங்களையும் பயிற்சி வகுப்புக்களையும் நடாத்திவருகின்றார்.

# சேவையிலிருந்து ஓய்வு பெறுவார்

கோண்டாவில், வெள்ளி

கடந்த முப்பது வருடங்களாகக் கோண்டாவில் கிராம அதிகாரியாகக கடமையாற்றிய திரு சி. இரத்தினசிங்கம் இம்மாத இறுதியில் தமது பதவியிலிருந்து ஓய்வு பெறுகிறார். அன்னரது சேவையைப பாராட்டுமுகமாகக் கோண்டாவில் கிழக்கு வாசிகளால் ஒரு பிரியாவிடைக் கூட்டம் நடத்த ஏற்பாடாகியுள்ளது.

# கிராம அபிவிருத்திச் சங்க ஆண்டுக் கூட்டம்

பருத்தித்துறை, புதன்

புலோலி மேற்கு கிராம அபிவிருத்திச் சங்க வருடாந்தப் பொதுக் கூட்டம் சங்கத் தலைவர் திரு. சு. சபாபதிப்பிள்ளை தலைமையில் நடைபெற்றது,

சங்க மண்டபத்தில் நடைபெற்ற இக்கூட்டத்தில் காரியதரிசி, தனதிகாரி ஆகியோர் தமது அறிக்கைகளைச் சமர்ப்பித்து அங்கீகாரம் பெற்றனர்.

கூட்ட முடிவில் புதுவருட உத்தியோகத்தர்கள் தெரிவு நடைபெற்றபோது பின்வருவோர் உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்:-

போஷகர்கள்:- திரு. மு. சிவசிதம்பரம், திரு. ஜே. டி. ஆர்னல்ட். தலைவர்:- திரு. சு. சபாபதிப்பிள்ளை, உப தலைவர்கள்:- திரு. கா. சு. கார்த்திகேசு, திரு. இ. சே. சுப்பிரமணியம், திரு. வே. சிவப்பிரகாசம் இணைச் செயலாளர்கள்:- திரு. க. தி. விவேகானந்தா, திரு. செ. அருளம்பலம். தனதிகாரிகள்:-திரு. அ. செல்லையா, திரு. மூ. தம்பிராசா.

# மகா கும்பாபிஷேகம்

உரும்பராய், வெள்ளி

சரித்திரப் பிரசித்தி வாய்ந்ததும், பழமையுமான உரும்பராய் பர்வதபத்தினி அம்பாள் புனராவர்த்தன சம்சோட்சண மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் திங்கட்கிழமை அதிகாலை 7 மணிக்கு வேதாகம விதிப்படி நடைபெறும். கும்பாபிஷேக கிரியாரம்பம் சென்ற வியாழக்கிழமை தொடங்கி நடைபெற்று வருகின்றது.

அம்பாள், நடராஜர், விக்னேஸ்வரர் முதலிய மூர்த்திகளுக்கு நவகுண்டங்கள் அமைத்து யாகங்கள் சிறப்புற நடைபெறுகின்றன. மாதகல் பிரம்மஸ்ரீ செ. கு. கதிரவேற் குருக்கள் மேற்பார்வையில் கிரிகைகள் நடைபெறுகின்றன சைவப் பெரியார்களின் சொற்பொழிவுகளும் நடைபெற்று வருகின்றன.

மேற்படி கும்பாபிஷேக தினத்தன்று பர்வதபத்தினி அம்பாள், விக்னேஸ்வரமூர்த்தி, சிவாகமசுந்தரி சமேத சிதம்பர நடராஜ மூர்த்தி பிரதிஷ்டை செய்துவைக்கப்படும் மேற்படி ஆலயத்திருப்பணிகள் நிறைவேற ரூபா "இருபத்தையாயிரத்திற்கு அதிகமாகச் செலவழிக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது





ஆமாம், நாளாந்தம் கடினமாக உழைப்போர்க்கு உகந்த சிறந்த கடினமான, நன்கு பாவிக்க வல்ல புடவை இதுவே! கனபோ பொப்ளின்பாடசாலை யூனிபோம்களுக்கும் காற்சட்டை ஷர்ட்டுகளுக்கும் மிகச் சிறந்தது வெள்ளையிலும், மென்மையான பல வண்ணங்களிலும் கிடைக்கும். சாயம் போகாது என்பதற்கு உத்தரவாதமுடையது.

ஏகவினியோகஸ்தர்கள்: ஸி. டப்ளியூ. ஈ.

கிடைக்குமிடம்: ஸி. டப்ளியூ. ஈ. இலாகா ஸ்டோர், கோட்டை, கொழும்பு. மங்கலம் ரோட் மெயின் வீதி, புறக்கோட்டை, மருதானை மற்றும் வெளியூர்கள்

ஞாபகமிருக்கட்டும் ஸி. டப்ளியூ. ஈ CWE தரத்திலும் ரகத்திலும் சிறந்ததைத் தருகிறது.

CWE 14/01

# 'கூட்டுறவு சங்கம் மூலம் பொருளாதார விருத்தி'

## பண்டசாலை திறப்பு விழாவில் திரு. எஸ். எம். இராசமாணிக்கம்

களுவாஞ்சிக்குடி, வெள்ளி
"பணநெருக்கடியால் அரசாங்கம் கஷ்டப்படும் இச்சமயத்தில் நாம் கூட்டுறவுச்சங்கத்தின் மூலம் பொருளாதாரத்தை விருத்தி செய்யவேண்டும்".

பளுகாமம் இரண்டாம் குறிச்சி பலநோக்குக் கூட்டுறவுச்சங்கத்தின் புதிய பண்டகசாலை கட்டடத்தைத் திறந்து வைத்துப் பேசுகையில் தமிழரசுக்கட்சித் தலைவர் திரு. எஸ். எம். இராசமணிக்கம் மேற்கண்டவாறு கூறினர்.

அவர் தொடர்ந்து பேசியதாவது: "பொதுமக்களின் நலனுக்காகவும் பொருதார விருத்திக்காகவும் தான் கூட்டுறவுச்சங்கங்கள் நிறுவப்பட்டிருக்கின்றன. பொதுமக்களின் நன்மைக்காக நிறுவப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களின் பிரயோசனங்களை மக்கள் நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ளாமல் வருவது வருந்தத்தக்கதொரு செயலாகும். ஆனல் கூட்டுறவுச்சங்கங்கள் தப்னிபட்டவர்களின் சொந்த நலனுக்காகப் பயன்படுத்தப் பட்டு வரக்கூடாது.

இலங்கையில் நிதி நெருக்கடி இருக்கிறது என்பதை யாரும் மறுக்க முடியாது. நிதி நெருக்கடியால் அரசாங்கம் கஷ்டப்படும் இச்சமயத்தில் கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் பொருளாதாரத்தை நாம் விருத்தி செய்ய வேண்டும்.

பொருளாதாரத்தை விருத்தி செய்வதற்கு அரசாங்கம் அதிக பணத்தைச் செலவிட்டு வருகிறது. அரசாங்கத்திடமிருந்து நாம உதவியைப் பெற்றுக் குடிசைக் கைத்தொழிலில் ஈடுபட வேண்டும். பண்ணைகளை நாம் ஆரம்பிக்கவேண்டும். நெசவாலைகளை நிறுவ வேண்டும். கமத்தொழிலை மதித்து அதில் பெருமளவில் ஈடுபட வேண்டும். நமது முன்னேற்றம் நமது கையில்தான் இருக்கிறது".

மட்டக்களப்பு மாவட்ட கூட்டுறவு ஆணையாளர் பேசுகையில் நல்ல முறையில் நடைபெறும் சங்கங்களுக்கு அப்பொழுது கூடிய உதவிகள் கிடைக்கிறதென்றும் தாய்மார்கள் எப்படி தங்களது குழந்தைகளைத் திருத்துகிறார்களோ அதே மாதிரி தாமும் தவறுதல்களை விடும் சங்கங்களைத் திருத்துகிறதாகவும் கூறினர்.

— —

## இரணைதீவு கொலை வழக்கு
### மே 4-ம் திகதி வரை ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், வெள்ளி
இரணைதீவு கொலை வழக்கு மாஜிஸ்டிரேட் திரு. அரசுவாலடன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது அப்போதிக்கரியும், பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரும் சாட்சியமளித்தனர்.

எதிரிகளின் சிரேஷ்ட வழக்கறிஞர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் கோர்ட்டிற்கு வராததால், விசாரணையை பார்ப்பதற்கு குழுமியிருந்த ஏராளமான மக்கள் ஏமாற்றத்துடன் திரும்பினர்கள்.

இவ்வழக்கு விசாரணை மே மாதம் 4-ம் திகதிவரை ஒத்திபோடப்பட்டுள்ளது.

## வகுப்புவாதத்தை ...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

துரையப்பா, வவுனியாப் பிரதிநிதி திரு. த. சிவசிதம்பரம் மூதூர்த்தொகுதி 2-வது பிரதிநிதி ஜனுப் ஏ. எல். ஏ. மஜீத், புதிய செனட்டர் சுப்பையா நடேசபிள்ளை ஆகியோரை ஐக்கிய இலங்கைக்காக பாடுபடுகின்ற பெருந்தகையாளர்கள் என்பதை நான் கூறவிரும்புகிறேன். வகுப்புவாதத்தைத் திணிப்பதில் கைதேர்ந்தவர்களாக விளங்கும் வகுப்புவாத மன்னர்களான தமிழரசுப்பிரதிநிதிகள் மத்தியில் இப்படி பரந்த நோக்குடைய தமிழ்ப பிரதிநிதிகள் இருப்பது தமிழ் மக்கள் செய்த பாக்கியமென்றேநான் கருதுகின்றேன்."

மூதூர்த் தொகுதியில் ஐக்கியதேசியக்கட்சி அபேட்சகராகப் போட்டியிட்ட திரு ஏ. எச். அல்விஸ் பேசுகையில் கூறியதாவது:-

"திருக்கோணமலை பட்டினத்தில் 12,000 சிங்களமக்கள் வாழ்கின்றார்கள், திருமலை நகராண்மைக்கழகத்திற்கு இவர்களும் வரிப்பணம் லெுத்துகின்றனர். ஆனல் ஒரு சிங்கள எழுத்தையோ ஆசைக்குத்தானும் திருக்கோணமலை நகரசபையில் பார்க்கமுடியாமலிருக்கிறது. "கள்ளத்தோணி" தமிழர்கள் நகர எல்லைக்குள் சட்டவிரோதமாக வீடுகள் கொட்டில்கள் போடின் கண்டும் காணுதவராக இருக்கும் நகரசபை அதிகாரிகள் சிங்களவர் கொட்டில்களை எல்லைக்குள் கட்டிவிட்டால் சட்டவிரோதமான கொட்டில்கள் என வழக்காடி வெளியேற்றுகின்றனர். இந்த அநியாயத்தை உடனே தவிர்க்க திருமலை நகரசபையைக் கலைத்து விசேட ஆணையாளரிடம் ஒப்படைக்குமாறு திருமலை வாழ் சிங்களமக்கள் சார்பில் உதவி மந்திரியை வேண்டுகின்றேன். திருமலை நகரசபையிடமிருந்து திருமலை வாழ் சிங்கள மக்கள் தங்கள் உரிமைகளைப் பெறுவதற்காக சபைவாசலின் முன் சத்தியாக்கிரகம் செய்யும் நாள் வெகுதூரத்தில் இல்லையென்று நகரசபையாளருக்கு எச்சரிக்கை விடுகிறேன்".

## இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியில் பிளவு
### சீன—ரஷ்ய கொள்கை வேறுபாட்டின் எதிரொலி

கொழும்பு, வெள்ளி
இலங்கைக் கம்யூனிஸ்ட்கட்சிக்குள் உள்ள ரஷ்ய ஆதரவாளர் கோஷ்டிக்கும் சீன ஆதரவாளர் கோஷ்டிக்குமிடையில் அடிப்படைக் கருத்து வேறுபாடேற்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

ரஷ்ய சோஷலிஸ பிதா லெனினுடைய 93-வது பிறந்த தினக் கொண்டாட்டங்களில் திரு. பீட்டர் கெனமனும் திரு. என். சண்முகதாசனும் நிகழ்த்திய பேச்சுக்கள் இக்கருத்து வேற்றுமையைப் பிரதிபலித்திருக்கிறது.

ரஷ்யாவின் வெளிநாட்டுக் கொள்கையையும், அதன் சோஷலிஸ தத்துவார்த்தத்தையும்பற்றி திரு. கெனமன் ஒரு கூட்டத்தில் வெகுவாகப் பாராட்டியபோது திரு. சண்முகதாசனே மற்றொரு கூட்டத்தில்சீன வெளிநாட்டுக் கொள்கையை பாராட்டியிருக்கிறார்.

"இன்றைய உலகில் சீனவின் மாசேதுங்தான் பெரும் மார்க்ஸீயவாதி" என்று திரு. சண்முகதாசன் தாம் பேசிய கூட்டத்தில் குறிப்பிட்டார்.

ஆனல் இதற்குப் பதிலளிக்குமுகமாக மற்றொரு கூட்டத்தில் பேசிய திரு. கெனமன் "சோஷலிஸம் பிறந்தது ரஷ்யாவில்தான். அதே நாட்டில் தான் சிறந்த கம்யூனிஸ்ட் சமுதாயம் ஒன்று உதயமாகும்" என்று குறிப்பிட்டார்.

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சிக்குள் வேறுபாடேற்படக்காரணம் ரஷ்ய வெளிநாட்டுக் கொள்கையும் சீனவெளிநாட்டுக் கொள்கையும் தானென்று கூறப்படுகிறது.

கட்சி முக்கியஸ்தர்களுக்கிடையில் ஏற்பட்டிருக்கும் வேறுபாடு இதர அங்கத்தவர்களுக்கிடையிலும் பரவி பிளவேற்பட்டுவிடாமல் பார்த்துக்கொள்ள ஒரு கோஷ்டி முயற்சியெடுத்துவருகிறது.

இந்தியாமீது சீன தாக்குதல நடத்தியதைக்கண்டிக்கும் கோஷ்டியொன்றும் இப்போது கட்சிக்குள் பலமடைந்துவருகிறது.

## கைத்தொழில் சுவீப் முடிவுகள்

கொழும்பு, வெள்ளி
பத்தாவது கைத்தொழில் பொருட்காட்சி 'சுவீப்' முடிவுகள் பின்வருமாறு:—

முதலாவது பரிசு
08 A 0340 ரூபா 20,000

இரண்டாவது பரிசு
04 U 0495 ரூபா 10,000

மூன்ருவது பரிசு
06 X 0541 ரூபா 5,000

நான்காவது பரிசு
08 J 0622 ரூபா 2,500

ஐந்தாவது பரிசு
03 X 0980 ரூபா 1,250

ரூபா 500 கொண்ட ஐம்பது சாதாரண பரிசுகளின் இலக்கங்கள் பின்வருமாறு:—

| | |
|---|---|
| 03 E 0214 | 05 J 0496 |
| 13 J 0427 | 01 P 0445 |
| 08 W 0728 | 10 R 0631 |
| 05 I 0625 | 02 P 0455 |
| 13 R 0370 | 02 J 0765 |
| 04 E 0103 | 11 J 0115 |
| 1 R 0753 | 06 C 0064 |
| 07 I 0955 | 11 B 0691 |
| 04 A 066[illegible] | 1[illegible] W 0447 |
| 11 X 0992 | 11 Y 0720 |
| 05 G 0512 | 12 C 0465 |
| 11 K 0153 | 03 T 0336 |
| 09 J 0658 | 03 W 0347 |
| 03 C 0930 | 06 R 0904 |
| 06 N 0903 | 04 P 0415 |
| 08 V 0597 | 05 C 0870 |
| 11 M 0711 | 13 M 0779 |
| 01 P 0231 | 09 M 0146 |
| 03 P 0426 | 06 J 0406 |
| 14 S 0029 | 02 L 0172 |
| 03 L 0389 | 15 I 0191 |
| 04 A 0708 | 10 L 0367 |
| 02 C 0699 | 05 H 0496 |
| 14 M 0470 | 15 G 0200 |
| 12 E 0911 | 10 W 0483 |

ரூபா 300 கொண்ட ஐம்பது சாதாரண பரிசுகளின் இலக்கங்கள் பின்வருமாறு:—

| | |
|---|---|
| 14 T 0689 | 01 C 0093 |
| 05 K [illegible]857 | 15 T 0106 |
| 05 X 0675 | 02 Y 0359 |
| 02 I 0355 | 11 U 0391 |
| 14 S 0264 | 15 S 0856 |
| 12 H [illegible]950 | 05 V 0768 |
| 05 Y 0030 | 05 G 0103 |
| 04 Q 0294 | 02 C 0245 |
| 02 N 0336 | 10 P 0030 |
| 09 X 0585 | 07 L 0515 |
| 06 I 0403 | 02 V 0552 |
| 08 F 0473 | 01 Z 0214 |
| 13 I 0147 | 04 T 0689 |
| 05 W 0151 | 03 R 0606 |
| 01 D 0729 | 02 C 0936 |
| 12 F 0978 | 01 L 0541 |
| 11 H 0419 | 12 Z 0924 |
| 07 A 0668 | 03 E 0629 |
| 03 T 0121 | 10 S 0412 |
| 05 E 0471 | 03 C 0155 |
| 14 P 0190 | 06 N 0339 |
| 07 N 0977 | 09 V 0155 |
| 08 J 0082 | 04 H 0558 |
| 04 Z 0038 | 04 Q 0262 |
| 11 P 0626 | |

## அரசாங்கம் எவ.....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஸ்தாபனத்தின் ஜெனரல் மனேஜர் திரு. சாம் சில்வா பதவியிலிருந்து நீக்கப்படப் போவதாக அறியப்படுவதாக கூறி, திரு. சாம் சில்வா பதவியிலிருந்து நீக்கப்படுவாரா என வர்த்தக மந்திரி திரு. ரி. பி. இலங்கரத்தினவிடம் வினவினர். முற்பகல் நடந்த சபை நிகழ்ச்சிகளின் போது திரு நிசங்காவிஜயரத்தினவை பொதுச் சேவைக் கமிஷனிலிருந்து இடமாற்றம் செய்யப்பட்டதையிட்டு ஒருவிசாரணை நடத்தவேண்டும் எனவும் திரு. ராஜரத்ன கேட்டுக்கொண்டார்.

### பிலிப் குணவர்த்தனவின் ஆட்சேபம்

சேள்வி நேரத்தின் பின்னர் திரு. பிலிப் குணவர்த்தன பேசுகையில் சபை நிகழ்ச்சிகளை அரசாங்கம் நினைத்த மாதிரி நடத்துவதையிட்டு ஆட்சேபம் தெரிவித்தார். திரு. குணவர்த்தன மேலும் பேசியதாவது:

"சபையில் முக்கிய விஷயங்கள் விவாதிக்கப்பட விருந்த நேரங்களில் சபை முதல்வர் சபையில் பிரசன்னமாயிருக்கவில்லை. மந்திரிகளிடம் கேட்கப்பட்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பதற்கு அவர்கள் சபையில் இருக்கவில்லை. புதிய தொடர் கூட்டம் எப்பொழுது ஆரம்பமாகிறது, எப்பொழுது வரவு செலவுத்திட்டம் சமர்ப்பிக்கப்படும், சபை எந்தத் திகதி வரையும் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது போன்ற விஷயங்களை அறிவதற்கு சபைக்கு உரிமையுண்டு. அரசாங்கம் விரும்பியபடி சபை நிகழ்ச்சிகளை நடத்துவதற்கு எதிர்க்கட்சி உடன்படாமலிருக்கலாம்."

திரு குணவர்த்தனவின் ஆட்சேபத்தை தானும் ஏற்றுக்கொள்வதாக திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன தெரிவித்தார். என்னென்ன சபையில் நடைபெறுகிறது, நடைபெறவிருக்கிறது என்பனபற்றி சபைக்கு அறிவிக்கவேண்டுமெனவும் அவர் தெரிவித்தார்.

சபை முதல்வர், அவரது அமைச்சு சம்பந்தமான முக்கிய நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொண்டதால் சபையில் பிரசன்னமாயிருக்கவில்லை என திரு. கலுகல்ல தெரிவித்தார்.

—

## சாம் சில்வா பதவி நீக்கப்படுவார்?

கொழும்பு, வெள்ளி
பெட்ரோலிய கூட்டுஸ்தாபனத்தின் ஜெனரல் மனேஜர் திரு. சாம் சில்வா பதவியிலிருந்து நீக்கப்படுவார் என அறியப்படுகிறது. மே மாதம் இரண்டாம் திகதியிலிருந்து இவர் பதவி நீக்கம் செய்யப்படலாம் என நம்பதவட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது.


கட்டுடை அரசடி பிள்ளையார் கோவில் நிதிக்காக

ரீகல் தியேட்டரில் 8-ந்திகதி காலை 10-30 மணிக்கு

"களத்தூர் கண்ணம்மா"

படம் காண்பிக்கப்படும்.

இப்பொழுது திரையிடப்படுகிறது




சினிமாஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரின் மகத்தான வெளியீடு

தென்னகத்தில் 100 நாட்களுக்கு மேல் ஓடி வெற்றியீட்டிய திரைக்காவியம் !

கிங்ஸ்லி (கொழும்பு) நினாஸா (வெள்ளவத்தை) வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜயா (மட்டக்களப்பு)

ஸ்ரீ கிருஷ்ண (திருமலை) மொடர்ன் (பண்டாரவளை) லக்ஷ்மி (இரத்தினபுரி) விஜிதா (ஹட்டன்)

மனேகரா (யாழ்ப்பாணம்) (ஜெமினி) (ராகலை)

★ மூன்று உள்ளங்களுக்கு இடையே ஒரு போராட்டம்

★ பாசத்திற்கும் காதலுக்கும் ஏற்பட்ட பயங்கர சோதனை

சிவாஜி கணேசன்
எஸ். எஸ். ராஜேந்திரன்
பி. சரோஜா தேவி
ஆர். விஜயகுமாரி
எம். ஆர். ராதா
வி. நாகையா
எம். வி. ராஜம்மா
பி. எஸ். வீரப்பா
புஷ்பலதா



நடித்த

— பி. எஸ் வி. பிக்சர்ஸ் —

ஆலய மணி

டைரக்ஷன் கே. சங்கர்

இசை விஸ்வநாதன் — ராமமூர்த்தி


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில்மேலை வீதி 53-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1963-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 27-ந் திகதி அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டது